முரசொலி

வார இதழ்

ஆசிரியர் மு. கருணாநிதி

முரசு 2 | 24—2—56 | வெள்ளி | ஒலி 47

Filmed as bound

தமிழர்களின் சபதம்!

அன்புள்ள குமார்,

அண்ணு கணிக்கின்ற அரசியல் 'ஜாதக'ங்களைப் பற்றித்தான் முன்பே ஒருமுறை விளக்கி இருக்கிறேனே!

அண்ணு சொல்லுகிருர் என்ருல் அந்த சொல்லை வெல்லுஞ் சொல், வேறெதுவும் இல்லை யென்றுதான் பொருள்.

பிப்ரவரி 20, எழுப்பிவிட்ட கேள்விக்குறிக்கு எத்தனையோ விடைகள் நாட்டுமக்களின் விழிகளுக்கு முன்ஞலே தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தன.

என்ன நடக்குமோ! எத்தகைய விளைவுகள் ஏற்படுமோ? எத்தனை உயிர்கள் அன்று காற்ருேடு காற்ருய், கலந்துவிட இருக்கின்றனவோ, என்ற திகில் தமிழகத்து மக்களின் இதயங்களிலே கூத்தாடிக் கொண்டிருந்தன!

யாருமே நினைத்திருக்க முடியாது, ஏன் நமக்கே கூட, வெள்ளம்போல் திரண்டிருக்கும் இந்த அணிவகுப்பை, கட்டிற்கு கொண்டுவர முடியுமா? எப்படி சமாளிக்கப் போகிருேம் என்ற சந்தேகம்! இவ்வளவு அமைதியான முறையிலே செயலாற்றி—தமிழர்தம் பண்பாட்டிற்கு கீர்த்தி தேடித் தரும் என்று எதிர்பார்க்கவில்லை!

'பம்பாயைப் பார்த்துமா புத்தி வரவில்லை' என்று, காமராசர் நம்மைப் பார்த்து வீண்வார்த்தை சிந்தியபோது, அண்ணு குறிப்பிட்டார்,

"பம்பாய் பம்பாய்தான்; சென்னை சென்னைதான்"

என்று!

குமார், பம்பாயிலே நடைபெற்ற குழப்பங்களையும்-கோரமான சம்பவங்களையும் மனதிலே நிறுத்தி, பிப்ரவரி 20-ந் தேதி சென்னையைப் பார்த்தவர்கள், சர்வகட்சித் தலைவர்களின் பொறுப்புணர்ச்சியையும் அண்ணு கணித்த 'சென்னை சென்னைதான்' என்ற ஜாதகத்தையும் எண்ணி எண்ணி பெருமைப் படாமல் இருக்க முடியாது. எங்கிருந்து புறப்படுகிறது இந்த புலிக் கூட்டம்! இந்த அணிவகுப்பிற்கு ஆரம்பம் எது? முடிவு எங்கே? ஆர்த்தெழுந்து-ஆர்வத்தை நெஞ்சங்களிலே தேக்கி, 'எங்கள் உடமைகளை திருப்பிக் கொடு! ஏ! சர்க்காரே,நீ இழைத்த அநீதிக்கு பதில் எங்கே?' என்று இடிக்குரல் எழுப்பியபடி, பாடி வீடு நோக்கி படை திருப்பிய வீரர்களைப் போல, ஊர்ந்து சென்ற அந்த சேனைகளுக்கு தளபதி யார்? இத்தகைய கேள்விக் குறிகள்தான் அன்று சென்னையிலே இருந்தவர்களின் நெஞ்சங்களையெல்லாம் குடைந்து கொண்டிருந்தன!

அன்ெருரு நாள் காஞ்சியிலே இருந்து கலிங்கம் நோக்கிக் கிளம்பிய பட்டாளமோ இதுவெனத் திகைப் படைந்தோர் பலப்பலர்!

புழுதி மண்டலத்தை கிளப்பியபடி கண்ணுக்கெட்டிய தூரமெல்லாம்—காளையர் கூட்டமாக தோற்ற மளித்த அந்த அணிவகுப்பைப் பார்த்து 'மாம்பலமும்-'மைலாப்பூரும்' கூட 'இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்' என்ற வாசகங்களை பெருமையோடு அல்ல! பொருமை கூத்தாடும் நெஞ்சங்களோடு முணுமுணுத்தன!

'தமிழகத்துக்கா அநீதி? இதோ பார் என் பட்டாளத்தை!" என்று தடி ஊன்றி புறப்பட்ட முதுபெரும் அரசியல் அறிஞர் பி. டி. ராசன், முன்ஞலே நடந்து செல்ல, ஆரியத்தின துடுக்கடக்கிப் படை கடந்த, நெடுஞ்செழியனே இவர், என்று நம்,நெஞ்சங்கள்பூரிப்பால் மலரும் விதத்தில்—நமது பொதுச் செயலாளர் பக்கத்திலே செல்ல; அன்று சென்னையிலே இரண்டு லட்சத்திற்கும் மேற்பற்டோர் பரணிபாடிச் சென்ற காட்சி கண்டோர், புறநானூற்றுக் காட்சிகளை கண்முன்ஞல் பார்த்து—புரட்சிக் கவிஞரின் 'வெள்ளம்போல் தமிழர் கூட்டம், வீரங் கொள் கூட்டம்; உள்ளத்தால் ஒருவரே மற்று, உடலிஞல் பலரே காண்பாய்!' என்ற கனவை—காட்சியாகக் கண்டவர்களாவார்கள்!

தமிழகம் எங்கும் பிப்ரவரி 20-ம் நாள், நடைபெற்ற அமைதியான 'ஹர்தால்' தமிழகத்துத் தலைவர்களின் கீர்த்திக்கோர் புகழ் பட்டயம்!

தமிழர்களின் கண்ணியத்தை உலகிற்கு எடுத்துக் காட்டும் பொன்வரிகள்!

19-2-56 அன்று மாலை சென்னைக் கடற்கரையிலே தலைவர் தட்டிய அறப்போர் முரசத்தின்; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற ஒலிகளைக் கேட்ட பிறகும்; இந்த சர்க்கார்; செய்த ஜரூரும்; போலீஸ் மிரட்டலும்தான் இரண்டொரு இடங்களில்—சிறு சிறு குழப்பத்தையும்—வேண்டுமென்றே நம் படை வரிசையின் கட்டுப்பாட்டிற்கும், கடமை உணர்ச்சிக்கும் மாசு கற்பிக்கவும், முயன்றிருக்கின்றன; குமார், நெஞ்சங்களிலே நேர்மையைத் தேக்கி—நீதி எங்கே என்று குரலெழுப்பியபடி, பயிற்சி பெற்ற பட்டாளத்தைப்போல, பொறுப்புணர்ச்சி மிக்க தலைவர்களின் பின்ஞலே சென்ற அந்த அறப்போர் அணிவகுப்பிற்குத்தான், இந்த கேடு கெட்ட சர்க்கார், குதிரைப் பட்டாளத்தையும்; துப்பாக்கி ஏந்திய மலபார் போலிசையும்; முரட்டு சிப்பாய்களையும் கொண்டு வந்து நிறுத்திற்று!

அமிர்தசரசிலே முன்பு இப்படித்தான் ஒரு அணிவகுப்பு, உறுவிய வாள்களுடன்; ஊர்வலம் நடத்திற்று—ஆஞல் நாமோ, உறுதியான உள்ளத்தோடு. நிராயுத பாணிகளாய்ச் சென்ருேம்; என்ருலும் இந்த துருப்பிடித்த சர்க்காரின் நெஞ்சங்களிலே, திகிலும், திகைப்பும் ஏற்பட்டு அதிகாரக் குதிரைகளையும்,ஆர்பாட்டக்காரர்களையும் அவிழ்த்துவிட்டு; பொது மக்களுக்கு தேவையில்லாத பீதியையும்—திகைப்பையும், உண்டாக்கி இருக்கின்றனர்:

தமிழக மெங்கும், வெற்றிகரமாக நடைபெற்ற இந்த 'ஹர்தாலைப்' பற்றி 'மெயில்' போன்ற ஏடுகள் ஓரளவு உண்மையான செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கும்போது, 'தினமணி' ஏடு வழக்கமான தன் கோணல் புத்தியைக் காட்டி இருக்கிறது; பஸ்களை மறிக்க நடந்த முயற்சி பலிக்கவில்லை யென்று'

அலை கடலை சேருக்கிவிடச் செல்கிறதோ இந்த தமிழர்படை, என்று வியப்படைகின்ற அளவிற்கு திரண்டெழுந்த சிங்க அணிவகுப்பை பார்த்தும்தான்; அந்த ஏடு இப்படி கேலி பேசி இருக்கிறது;

19-2-56 அன்று கடற்கரையில் பேசிய தலைவர்கள், நேராக வேண்டாம், ஜாடையாகக் குறிப்பிட்டிருந்தால் போதுமே! கேவலம் பஸ்களை மறிக்க நடந்த முயற்சியா பலிக்காமல் போய் இருக்கும்? சர்க்கார் பட்டாளத்தை ஏவி தங்களைப்பாதுகாக்க எடுத்துக் கொண்ட முயற்சியல்லவா மண் மேடாகி இருக்கும்!

ஐலண்டு மைதானத்திலிருந்து கிளம்பிய அறிவுப்படையின் அடிச்சுவடுகள் கிளப்பிய புழுதி மண்டலம் போதுமே — இந்தப் பொல்லாதவர்களை புதைபொருள் ஆக்கிவிட! என்ருலும் தமிழர்களின் உடமை காக்க எழுந்த பெரும் படையைப் பார்த்துதான் கேலி பேசுகிறது தினமணி! அது என்ன செய்யும்! தமிழர்களின் காசு! அந்த கோயங்கா ஏடு நம் தன்மானத்தை நோக்கி குத்தீட்டியைத் திருப்புகிறது, முயற்சி பலிக்கவில்லையாம்!' தினமணி 'வலிய' அழைக்கும் அந்தமுயற்சிக்கு தலைவர்களின் கைஜாடை வேண்டாம்; கண் ஜாடை கிடைத்திருந்தால் போதுமே; நிலைமை எத்தனை பம்பாய்களை உருவாக்கி இருக்குமோ; நினைத்தாலே நெஞ்சு திடுக்கிடுகிறது!

'முயற்சி பலிக்கவில்லை என்று கேலி பேசுவதன்மூலம்''தினமணி' அந்த பயங்கர விளைவைத்தான் விரும்புகிறது போலும்!

கொந்தளிக்கும் அலை கடலருகில் கூடியிருந்த லட்சக் கணக்கானோர் பிப்ரவரி 20—அன்று எழுப்பிய உரிமைக் குரல்! அப்பப்பா! இனி நமக்கேது உறக்கம் என்ற உற்சாகத்தையும், உணர்ச்சியையும்தான் நம் இதயங்களிலே எழுப்பி இருக்கின்றன!

பொங்குகடலோரம் அந்த சிங்க நெஞ்சர்கள் எடுத்துக் கொண்ட சபதம்! நாம் வெற்றி பெரும்நாள்—வெகு தூரத்தில் இல்லை; என்பதைத்தான் முன் கூட்டியே அறிவிக்கிறது. அதோ! அடுத்து தலைவர்கள்—தீட்டவிருக்கும் திட்டம்; தமிழர்தம் வெற்றியின் இறுதிக் கட்டம்! குறித்துக்கொள்; வருகிறேன்.

அன்புள்ள,
பொன்முடி

நமது கிளர்ச்சி

★ தேவி குளம் பீர்மேடு தேவை என்கிறபோதே—நாம் மொழி வழியாகப் பிரிந்து வாழ விரும்புகிருேம்; தட்சிணப் பிரதேசம் என்ற இணைப்பை எதிர்க்கிருேம் என்பது தெளிவாகிறது!

ஆஞல்......

★ "தட்சிணப் பிரதேச எதிர்ப்பு" என்கிற ஒரே ஒரு பிரச்சினைக் கிளர்ச்சியில் தேவிகுளம், பீர்மேடு போன்ற தமிழ்ப் பகுதிகளைப் பற்றிய பிரச்சினை சேரவில்லை!

★ இது, அரசியலின் அரிச்சுவடி தெரிந்தவர்களுக்குக் கூட நன்ருகப் புரியும்!

தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 24--2--56 வெள்ளி

தமிழச் சிங்கக் கூட்டம்

தமிழ்நாட்டு அரசியல் சரித்திரத்தில் இதுவரை இப்படியோரு வெற்றிகரமான வேலை நிறுத்தம் நடந்ததில்லை யென்று மாற்ருரும் பாராட்டுகிற அளவுக்கு பிப்ரவரி 20-ம் நாள், தமிழர் பெரும்படை, தன்னைப் புகழுக்குப் பாத்திரமாக்கிக் கோண்டிருக்கிறது.

பொது வேலை நிறுத்தம்-எல்லாக்கட்சித் தமிழர்களும் இணைந்து நின்று எழுப்புகின்ற முழக்கம்—உரிமைப் பரணி—என்ற உண்மைகளையும் தமிழரின் கிளர்ச்சிக்கான நல்ல காரணங்களையும் தெளிவாகத் தெரிந்துகோண்டிருந்தவர்கள்கூட வழக்கமான தமது தீய பிரச்சாரத்தால் நமது தூய திட்டத்தைக் குலைத்துவிடப்பெரிதும் முயன்றனர். தட்சிணப்பிரதேசம் வேண்டாமென்பதும், தாய்த் தமிழகப் பகுதிகளை மீட்க எண்ணுவதும், அரசியல் கட்சிக்காரர்களின் சுயநலக் கூச்சல் என்று ஓலமிட்டனர் தியாகத்தை ஏலமிட்டு வாழும் ஒரு சில தேசபத்தர்கள்.

தேர்தல் களத்திலே இறங்குவதற்காக இஃதோர் முஸ்தீபு என்று பிரச்சினையின் கோணத்தையே திருப்ப முயன்று தீச்சோற்களை வாரி இறைத்தனர்; கனியிருப்பக் காய் கவரும் பண்பு கோண்ட உள்ளத்தினர். அரசு வாகனமேறிய அமைச்சர் பெருந்தகை காமராசர் அறிக்கை பாணத்தால் இவர்களையும் அடக்கி விடலாம் என்று கனவு கண்டார்.

காங்கிரஸ் தினசரிகளிலே காரசாரமான தலையங்கங்கள் தீட்டப்பட்டன; தமிழர், களம் புகுவது தகாது என்ற நோக்கத்தோடு! உபதேசம்—உருட்டல் — மிரட்டல் — அனைத்துமே உண்மைக்கு மாருக இருப்பது கண்ட தமிழர், தம்பாதையில் குறுக்கிடும் கல், முள் அவைகள் என எண்ணி கடமை யுணர்ச்சியோடு கண்யக் கேடயம் ஏந்தி விடுதலைப்பயணத்தைத் தொடங்கிவிட்டனர். எப்பக்கம் பார்க்கினும் தமிழர், ஊழையு முப்பக்கம் காண்போம் என்ற வெறி நிறைந்த சபதத்தோடு, அறநெறி பிறழிய ஆட்சியாளருக்குப் பாடம் புகட்ட அரிமாக் கூட்டமேன ஆர்ப்பரித்துக் கிளம்பிவிட்டனர்.

விஷமக் குப்பைகளை—துரோகச் சக்கைகளை—தன் அனற்கரத்தால் சாம்பலாக்கிக் காற்றிலே பறக்கவிடும் நிலையிலே தமிழர் பட்டாளம் பொங்கி யெழுந்து விட்டது!

அந்த எரிமலைத் தீக்குழம்பின் முன்னே எதிரிகளின் தலையங்கங்கள் ஜப்பான் வீடுகளாயின.

அந்தக் குமுறும் கடற்பெருக்கின் முன்னே குதர்க்க வாதிகளின் இறுமாப்புப் பேச்சுக்கள் குழவிகள் கட்டிய சிற்றில்களாயின.

ஆவேசங் கோட்டும் அந்தப் புயலின் முன்னே அரசியலாரின் அச்சமூட்டும் அறிக்கைகள் ஆற்றங்கரை நாணலாயின.

"நாம் தவறு செய்கிருேமா?" என்று ஒவ்வோரு தமிழனும் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். "இல்லை தமிழா இல்லை! முல்லை சூழ் நாட்டுக்கு அதிபதியே! இல்லை! எல்லைகளை மீட்பதிலே செழிப்புவளர் கோல்லைகளைத் திருப்பிக் கேட்பதிலே —தோல்லை தரும் பல மோழி இணைப்பைத் தடுப்பதிலே, தவருென்றுமில்லை!" என்ற பதில் அவனது இருதயத்து அடித்தளத்திலே யிருந்து கிளம்பிற்று.

"போகாதே போருக்கு!" என்பவர்கள் கடைந்தேடுத்த கோழைகள் மட்டுமேல்ல; தமிழரின் உரிமையைப் பறிப்பவரின் தாள் பிடிக்கும் மோழைகள் என்பதையும் உரக்கச் சோல்லி சிரித்துவிட்டுப் புறப்பட்டுவிட்டான் தமிழன், போருக்கு!

"எல்லைப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசித் தீர்த்துக் கோள்ளலாம்" என்ற கருத்தை காமராசர் காலதாமதமாக அறிவித்தார்.

தேவிகுளம் பீர்மேடு பற்றி காமராசரே பேசிப் பார்த்து, வாதாடி, டில்லியின் தீர்ப்பு தமிழருக்கு எதிராக வழங்கப்பட்ட பிறகும்—பேசி முடிவு செய்யலாம் என்பது, சீப்பை ஒளித்துவிட்டு திருமணத்தை நிறுத்திவிடலாமென்று கருதுவதற் கோப்பாகும் எனக் கண்டனர் தமிழர்—களம் புகுந்தனர்!

"அசம்பாவிதம் எதுவும் ஏற்பட்டால், அதற்குத் தூண்டி விட்டவர்களே போறுப்பாளியாவர்!" என்ற விதத்திலே அறிக்கை வந்தது மிரட்டலோடு! "நாங்கள் அறப்போர் வீரர்கள்-அசம்பாவிதத்தை அனுமதிக்க மாட்டோம்" என சூளுரைத்து, அரசியலாரின் அடக்கு முறைகள் அத்தகைய குழப்பங்களைத் தோற்றுவிக்காமலிருக்கட்டும் என எச்சரித்து, "தமிழ்நாட்டில் இந்தக் கிளர்ச்சிக்குக் காரண கர்த்தாக்கள் சர்வ கட்சித் தலைவர்கள் அல்ல; காமராசரும், நேருவுந்தான்! அவர்களது தீர்ப்பின் காரணமாகத்தான் இந்தத்தீ மூட்டப்படுகிறது; இதன் விளைவுகளுக்குப் போறுப்பு அவர்களேயாவர்!" என மக்கள் மன்றத்திலே குற்றப் பத்திரிகையைப் படித்து விட்டு உரிமைப்போர் முரசத்தை உலகதிரத் தட்டி விட்டார்கள்.

"இலங்கையிலே தமிழ் மொழியையும் அரசாங்க மோழியாக்க வேண்டுமென்று ஆங்குள்ள தமிழர்கள் பிப்ரவரி இருபதில் நடத்திய வேலை நிறுத்தத்தை ஆதரித்து எழுதிடும் தேசீய ஏடுகள், இங்குள்ள தமிழர் போராட்டத்தைக் கடுமையாக மறுத்தெழுதும் மர்மந்தான் என்ன? இந்த மாய்மாலத்தை உடைத் தெறிவோம் வாரீர்!" என மார் தட்டி மறத்தமிழர் பறையொலி முழக்கி விட்டனர்; பகையே ஓடி விடு! என அமைதியோடு அறிவித்து!

பிப்ரவரி இருபதில் தமிழகத்தில் தோன்றியிருக்கும், இந்த வரலாறு வியக்கும் புதிய திருப்பம், தமிழரை நோக்கி யிருக்கும் பல வெற்றிகளுக்கு அடித்தளமாக அமையும் என ஆன்றோர் கருதுகின்றனர்.

நமது ஏகபோக அதிகாரத்தையும், ஆதிபத்தியத்தையும் இந்த அணி சிதற அடித்து விடுமோ என சிறகோடிந்த பறவை போல் சிந்தாகூலர்களாக அமர்ந்திருக்கின்றனர்; செருக்கு ஒன்றை மட்டும் செங்கோலை வாழவைக்கும் சக்தியாகக் கருதிக் கொண்டிருந்த தருக்கர்கள்! இந்த ஒற்றுமை போதுத் தேர்தல் வரையிலே நீண்டு விட்டால் என்ன செய்வது எப்படி இடையிலே புகுந்து குட்டை குழப்புவது என்றெல்லாம் எண்ணங்களை அலைய விட்டுக் கோண்டு தவிக்கின்றனர்; தேர்தல் ஒன்றை மட்டுமே வாழ்வின் ஜீவநாடியாகக் கருதி யிருக்கும் "தேச பக்தர்கள்!"

தட்சிணப் பிரதேசத்தை எதிர்ப்பதிலும்—மோழிவழியாக ராஜ்யங்களை அமைப்பதிலும்—தமிழகப் பகுதிகளை மீட்பதிலும்—ஒன்று கூடி நிற்கும் இந்தக் கூட்டணியினர், இன்னும் இது போன்ற போதுப்பிரச்சினைகளிலே இரண்டறக்கலந்து, இன்னல்களைக் களைந்து மன மாச்சரியங்களை மறந்து "மங்கை யோருத்தி தரும் சுகமும், எங்கள் மாத்தமிழுக்கு ஈடில்லை!" என்ற பெருமிதத்தோடு தமிழ் காத்து, தமிழர் உடமை காத்து, மோழி வழியும் இனவழியும் முழு சுதந்திரத்தோடு வாழ்வதற்கு முனைவார்களாக!

அந்த நல்லவிளைவுக்கு—பிப்ரவரி இருபதில் எழுந்த தமிழச் சிங்கக் கூட்டத்தின் அணிவகுப்பு, ஒரு முன் மாதிரியாகும்!

பிப்ரவரி 20ல் நாம் யார் என்பதை காமராஜர் தெரிந்து கொண்டார்!

'ஒதுக்கப்பட்ட உயர்திருவாளர்கள்'!



ஏகாதிபத்ய சுமைதாங்கும் எடுபிடி...

சென்னை அமைச்சர்கள் அரசாங்க அலுவல்களை முடிவைத்துக் கொண்டு ஓடினார்கள், அமிர்தசரஸ் வைபவத்துக்கு!

கனம் சுப்ரமணியம் பிரத்யேக உடையில் காட்சியளித்தார்!

சென்னையிலே தூய்மையான தமிழனுடையில் காட்சியளிக்கும் கோவைக் கிழார், அன்றைய தினம் 'ஜவகர் பாணியில்' ஏகபாரத ஒற்றுமையை எடுத்துக் காட்டுவதைப் போல வடநாட்டாருள் ஒரு வடநாட்டானாய் உலா வந்தார்!

இருந்தும் என்ன? அவர்களுக்கு உரிய மதிப்பு அங்கே தரப்படவில்லையே!

பம்பாய் ஆங்கில ஏடு 'கரண்ட்' எழுதியிருப்பதைப் பாருங்கள்:

"தென்னிந்தியாவின் பெரிய தலைவர்கள் எங்கேயோ காணப்பட்டார்கள், எந்த நேரமும் அவர்கள் (மேலிடத்தவரால்) தேவைப்பட்டவர்களாகத் தோன்றவில்லை.

இது வரப்போகின்ற நிகழ்ச்சிகளுக்கு ஒரு முன்னறிவிப்பு போல இருந்தது. விந்தியத்துக்கு அந்தப் பக்கம் இருப்பவர்களுக்கு இனிமேல் முக்கியத்துவம் கிடையாது!

★

இங்கிருந்து அமிர்தசரஸ் ஓடிய கனவான்கள் மூலையிலே கிடந்து முனகிக் கொண்டிருந்ததை 'கரண்ட்' இதழ் இப்படிச் சித்தரித்துக் காட்டுகிறது!

தென்னகத்திலிருந்து அங்கு சென்றவர்கள் தியாகத்தில், தொண்டில், வழிகாட்டும் வித்தையில் எந்த விதத்திலும் விந்தியம் தாண்டி வாழ்வோருக்குக் குறைந்தவரல்லர்! இருந்தும் அவர்கள் கவனிக்கப்படவில்லை!

சென்ற ஆவடி மகாநாட்டின்போது வரவேற்புப் பணிகளைத் திறம்பட நடத்திக் காட்டியவர்கள் — அமிர்தசரசுக்கு இல்லாத வெற்றியை இங்கு தேடிக் கொடுத்தவர்கள்— அங்கு திரளாத கூட்டத்தை இங்கு எங்கிருந்தோவெல்லாம் திரட்டியவர்கள்— அங்கே மூக்காடு போட்டுத் துரத்தப்பட்டிருக்கிறார்கள்!

வெளிஉலகில் வீரனென்று பெயர் பெற்றவன் அடுப்பங்கரை சாம்ராஜ்யத்தில் அற்பனாகிவிடுவான்!

ஊருக்குள்ளே அவன் உருட்டு விழியுடன்—மிரட்டும் மொழியுடன் பவனி வந்து கொண்டிருப்பான்! புயலில் நாணல்போல பறந்து கிடக்கும் அவன் 'கிராப்'பைக் கண்டு சிறுவரெல்லாம் அஞ்சி நடுங்குவர்.

அவன் வீட்டுக்குள்ளே அடியெடுத்து வைத்தாலோ அடுப்பங்கரையிலிருந்து அம்மிக் குழவியும், மாறி மாறி அவனைச் சுற்றிச் சுழன்ற வண்ணமிருக்கும்!

—இந்த நிலையிலேதான் நம் மாநிலத்து உயர்திருவாளர்கள் பவனி வருகிறார்கள்!

சென்னையிலே ஆலவட்டம்! விந்தியம் தாண்டிவிடில் இவர்கள் மலைமுன் சிறு கடுகு— இதுதானே இவர்கள் நிலைமை!

காமராசர் இங்கு ஒரு கக்கனை ஆட்டுவிக்கும் கர்த்தாவாக இருக்கிறார். அவர் இல்லாவிட்டால் சென்னையிலே சூறாவளி வீசும் என்று அவர் பக்தர்கள் சொல்லுகிறார்கள்!

ஆச்சாரியாரை இருந்தவிடம் விட்டு அசையாமல் ஆணி அடித்துவைத்தவராம்!

டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி போன்ற 'புரட்சிக்காரர்'களின் வாய்க்கெல்லாம் பூட்டு மாட்டியவராம்!

—அவரும்தான் அங்கு கவனிக்கப்படவில்லை!

சுப்ரமணியத்தை மட்டும் என்ன சாமான்யர் என்றா சொல்லுகிறார்கள்? ஆச்சாரியாரின் அந்தரங்கத்தோடு பேசும் மனிதராயிற்றே!— அவரைக்கூட அங்கு வரவேற்றிட—மதிப்பு கொடுக்க ஆள் கிடையாதாம்!

திருமண வீட்டிலிருந்து வந்த அழைப்பைப் போலத்தான். அமிர்தசரசுக்குச் சென்றார்கள், நமது மாநில தலைவர்கள்!

ஆனால் அங்கோ அவமதிப்பு நடைபெற்றிருக்கிறது!

கன்னோசி நாட்டுக் காவலன் ஜெயசந்திரன் தனது மகள் சம்யுக்தையின் சுயம்வரத்தின் போது, பிருதிவிராஜனுக்கு அழைப்பு அனுப்பாமல், அவனது சிலையைச் செய்து, வாயிற் காப்போன் இருக்கும் இடத்தில் இருத்தி, அவமானப்படுத்திய கதையைச் சரித்திரத்திலே படித்திருக்கிறோம்!

உபசரிக்கப்படாத விருந்தினன் நிலையிலேதான் விருதுகள் பல சுமக்கும் நம் அமைச்சர்கள் நெஞ்சு புலம்பி அழ வேண்டிய நிலைமையும் உருவாகியிருக்கிறது!

மானத்தை மண்ணுயிரினும் மேலாக மதித்த பிருத்வி அன்று சம்யுக்தையைத் தூக்கி சென்று வரலாற்றிலே இடம் பெற்றான்!

நம்மவர்களோ அந்த அவமானத்தைத் துடைத்துக் கொண்டு, அடலேறுகளைப் போல உலவப் பார்க்கிறார்கள்!

முகத்திலே வழியும் கரிச்சாயத்தைப் பற்றிக் கவலைப்படாமல் வெற்றிப் புன்னகையை வரவழைக்கப் பார்க்கிறார்கள்!

வீரம் பேசித் திரியும் பச்சைத் தமிழர்காமராசரோ நேருதூக்கி வைக்கும் ஏகாதிபத்யச் சுமையைத் தாங்குவதிலேயே கவனத்தைச் செலுத்துகிறார்!

தென்னகத்து அரசியலைப் பொறுத்த வரையில் 'பழுனை' இருக்கும் சுப்ரமணியம் அமிர்தசரசிலும் அப்படித் தான் காட்சியளித்தாராம், வடநாட்டு உடையில்!

—இந்த 'வன்கணாளர்கள்' எப்போது தான் பிருத்வியாக மாறுவார்களோ? என்று தான் தன்மானம் பெறுவார்களோ?

★

அமிர்தசரசிலும் சுப்ரமணியனார் அப்படித்தான்!...

அமிர்தசரஸ் பற்றி......!

★★★ பொது மக்களைக் காத்துவருவதாகக் கதையளக்கும் காங்கிரஸ் கட்சி அமிர்தசரசில் நடத்தியமாநாட்டுப் பந்தலின் வெளிப்புறத்தை சுமார் மூவாயிரம் போலீஸ்காரர்கள் காவல் புரிந்தனர்!

அன்றைய மாநாட்டில் கலந்து கொண்டவருள் ஒவ்வொரு மூன்றாவது ஆளும் ஒரு போலீஸ்காரர்!

ஒவ்வொரு நான்காவது ஆளும் ஒரு காங்கிரஸ் தொண்டர் படையைச் சேர்ந்த ஊழியர்!

★★★ காங்கிரஸ் தலைவர் தேபர்ஜிக்கு 'பிஜ்லி பயில்வான்' என்பவர் சவரன் ஒன்று ரூ. 61-4-0 விலையுள்ள 61 சவரன்கள் கொண்ட மாலையொன்றைப் பரிசளித்தார்.

★★ அவர் ஒரு பஸ் சொந்தக்காரராம்!

★ அவருக்கு ஏன் இவ்வளவு அக்கரை? தேபருக்கு பரிசுதர வேண்டிய அளவுக்கு தாராள மனப்பான்மை அவருக்கு உதயமாவானேன்?

★ மாநாட்டில் கலந்து கொண்ட அத்தனை பேருடைய நெஞ்சிலும் இந்தக் கேள்விக் குறிதான் ஊசலாடிக் கொண்டிருந்ததாம்!

சரித விருந்து! சிந்தனைப் படையல்!!

படிக்க வேண்டிய நூல்!!!

இராம. அரங்கண்ணல்

—: எழுதிய ;—

"புழுதி மேடு"

வெளிவந்து விட்டது! விலை ரூ. 1-4-0. கழிவு 25 சதம்

★ அச்சில்: சரிதங் கலந்த நாவலோவியம்!

"வெண்ணிலா" (இராம. அரங்கண்ணல்)

அன்புப் பதிப்பகம், பொறையார், தஞ்சை ஜில்லா

யாழுளேபிறப்பினும் யாழ்க்கவைதாம் என் செய்யும்...?

பி.சி.கணேசன். பி.எஸ்ஸி;பி.டி.

முல்லை மணக்கும் கொல்லையிலே, இரவு இருள் போர்த்தபின் அவன் அவளுக்காக வந்து காத்துக்கிடப்பான. அவன் வருகையை, அவன் உணர்த்திய குறிகளால் அறிந்த அவள், அவனிடம் சென்று புல்லிக்கிடந்து மகிழ்வாள். புலவி, கலவி, புன்சிரிப்பு, இன்னிதழ்ச் சுவை—இப்படியாக இன்பக் கேணியில் குளித்து மகிழ்ந்தபின் கரையேர மனமல்லாமல் தயங்குவாள். கதிரவன் கீழ்த்திசையில் உலாக்கிளம்பி விட்டால், இந்தக் களவொழுக்கம் வெட்ட வெளிச்சமாகி விட்டால், ஏந்திழையாளை நிரந்தரமாக இழந்து விட வேண்டி வருமோ என்ற ஏக்கம் அவனுடைய இதயத்தைத் துனுக்குறச் செய்யும். இன்றைய இன்பத்தில் மனம் மயங்கி, நேரத்தை நீட்டி விட்டால் நாளைய இன்பம் எங்கே பறிபோய் விடுமோ என்ற பயத்தில் அவன் அவளிடம் பிரியா விடை பெற்றுப் பிரிகிறான்.

அவன் தந்த இன்பத்தை எண்ணியெண்ணி மகிழ்கிறாள். அவன் பிரிவு அவளைத் தகிக்கிறது. தொடும் பொழுது இன்பம் ஈந்து, விட்டுப் பிரியும் பொழுது சுடும் இந்த விரக வேதனைத் தீ, அவள் இதுவரை அறிநதிராத ஒரு புதுமைத் தீ !

"ஏனடி பெண்ணே, இப்படிக் கண் சிவந்து சோர்ந்து காணப் படுகிறாய்?', செவிலித்தாய் அவளைப் பார்த்துக் கேட்கிறாள்.

"ஒன்றுமில்லை, அம்மா! மலர்ச் சோலையில் தோழியோடு விளையாடும் பொழுது மகரந்தத் தூள் கண்ணிலே விழுந்து விட்டதம்மா!"—தலைவி சாதுரியமாகக் காரணம் காட்டுகிறாள். தோழியும் ஆமோதிப்புக் கொடுக்கிறாள்.

ஒரு நாள் இப்படி நடக்கலாம் ; இரு நாள் இப்படி நடக்கலாம் ; பல நாள் இதே நிலை நீடித்தது. அனுபவ சாலியான செவிலித் தாயின் உள்ளத்தில் மகளின் 'நடத்தை' பற்றி ஐயம் தோன்றியது. ஓடி விளையாடிய அந்த மானுக்கு வேலியிட முடிவு செய்கிறாள. வான வீதியில் பாடித் திறந்த கிள்ளை கூண்டுப் பறவையாகிறது.

அவன் முல்லைக் காட்டில் தேம்புகிறான். சொல்லாலேயே அவன் சோர்வு போக்கி, எல்லையில்லா இன்பததை அவனுக்கு ஈந்து மகிழ்ந்த அவளோ.........பாடாத தேனீ...உலவாத தென்றல்...... மணக்காத பூ—இப்பொழுது!

வேதனை பெருகுகிறது, இருவருக்கும். விடிவு காண முடிவுகட்டுகிறாகள். இதற்குத் தோழி துணை புரிகிறாள் ; தூது போகிறாள்.

ஒரு நாள் தலைவி, இல்லத்தில் காணவில்லை ! ஆம், அவளதன் இதயராஜாவோடு எங்கோ ஓடி விட்டாள ! களவொழுக்கத்தில் நிற்க, காதலனைக் கடி மணம் புரிந்து, மணாளனுக்கி மகிழ் வெய்த அவள் போய் விட்டாள் !

இது அடுக்குமா ? பழமையின் பாதுகாவலர்கள் பல்லைக் கடிப்பது காதில் விழுகிறது! என்ன செய்வது பெரியீரே ! பண்டைத் தமிழகத்தில், கண்கள் பேசி, கருத்தும் ஒத்தபின், களவொழுக்கம் நின்று, பெற்றோரின சம்மதம் கிடைக்காதபோது காதலனோடு ஓடிப்போகும் 'உடன் போக்கு' என்ற ஒரு நிலை இருந்திருக்கிறதே !

மகளைக் காணாத செவிலித்தாய் மனம் வருந்துகிறாள். அவளைத் தேடிப் புறப்படுகிறாள்.

அவள் போகின்ற வழியில் ஒழுக்கத்தை உயிரென ஓம்பும் அந்தணப் பெரியார் ஒருவர் வருகிறார். அவர் ஊரை ஏய்த்துப் பிழைக்கும் உஞ்சி விருத்திப் பார்ப்பனரல்ல ; வாழ்க்கையின் உண்மைகளை அனுபவத்தால் உய்த்தறியும் ஆற்றல் மிக்கவர் அவர் காடுமேடெல்லாம் சுற்றித் திரியும் பண்பினராதலால், ஒருவேளை தன்மகளையும் அவளோடு செல்லும் அந்த ஆடவனையும் அவர் பார்த்திருக்கக்கூடும் என்ற எண்ணத்தோடு, "என்னுடைய மகளும், ஆடவனொருவனும் களவொழுகக்ம் பேணும் எண்ணமுடையோராய், புறப்பட்டு விட்டனர் பெருந்தகையீர், அவர்களை இக்கான கத்தே எங்கேயாவது கண்டீர்களோ" என்று செவிலித் தாய் வினவினாள்.

"நான் அவர்களைக் காணாமலில்லை; ஆணுக்கமைந்த இலட்சணங்களும். பெண்ணுக்கிருக்க வேண்டிய பெருங்குணங்களும் காண்ட ஆடவனும் ஒரு பெண்ணும் செல்லக் கண்டேன். அவ்வாறு ஒத்த நலனும் ஒத்த பண்பும் கொணட அவ்விருவர் இணைந்து செல்வதே அறமெனக் கண்ட யான், அதைப் பற்றி மேலும் எண்ணாது வந்து விட்டேன்...," எனறு அப்பெரியார் பீடிகை போட்டாா.

செவிலித் தாய்க்கு இப்பொழுது தான் சற்று உயிர் வந்தது! அந்தணப் பெரியார் பேச்சைத் தொடர்ந்தார் :

"அம்மா, உங்களுடைய மகள்' உங்களால் பேணி வளர்க்கப்பட்ட அப்பேரெழில் பேழை பிறனுடைய உடமையாகி விட்டதே என்று மனம் வருந்தாதீர்கள். மலையிலே சந்தனம் தோனறினாலும் அது பயன்படும் பக்குவம் அடையும் போது, அதை உடலில் பூசிக் கொள்ளுகின்றவர்களுக்குத்தான் பயனளிகதமே யல்லாது, அது தோன்றிய மலைக்கு எவ்வகையிலும் பயன்டாது; ஆய்ந்து சிந்திக்குங்கால், பயன்படும் பருவத்து நும் மகள் உனக்குப் பயன் படாள்.

"வெள்ளிய ஒளி பொருந்திய முத்துக்கள் அலைகடலில் பிறந்தாலும் அணிபவர்க்குத்தான் பயன் படுமேயல்லாது, அது பிறந்த கடலுக்கு என்ன பயனைக் கொடுக்கும் ? சிந்திக்குமிடத்து உன்னுடைய மகள் நிலையும் அது தான்.

"எழு நரம்பு மீட்டப்படுவதால் யாழிலிருந்து பிறக்கும் இசையானது பாடுபவர்க்குப் பயன் படுமேயல லது, யாழினிற்கு அதனால் யாது பயன் ? அதுபோலப் பயன்படும் பருவத்து நும் மகளும் உனக்குப் பயன் படாள் !"

சந்தனத்தை ஈனுவது தான் மலையின் பொறுப்பு; முத்தை ஈவதுதான் கடலின் கடமை; இன்னிசை யெழுப்புவதுதான் யாழின் செயல்; ஆனால் நறுமணம் கமழும் சந்தனத்தை, வெண் முத்தை, யாழிசையை—பூசி மகிழ்வது, அணிந்து இன்புறுவது, கேட்டுத் திளைப்பது......... யாரே! பெண்ணைப் பேணி வளர்த்து வாலிப அழகு பொலியச் செய்வதுதான் செவிலித் தாயின் கடமை ! அதற்குப் பிறகு அவள் கூட்டிச்சேர்த்து வளர்த்தஅழகை, தொட்டு மகிழ்வது, இட்டு மகிழ்வது, இசைத்து மகிழ்வது எல்லாம் யாரோ! எங்கிருந்தோ வந்தவன்! புது உரிமையாளன் !

அந்தணர் எடுத்தியம்பிய உண்மை செவிலித்தாயின் உள்ளத்தை நெக்குருகச் செய்கிறது. மெய்மறந்து அந்த உண்மையில் அப்படியேலயித்து நிற்கிறாள் !

அந்தணர் பேசுகிறார்: "கற்பொழுக்கம் பூணத் தலைவனோடு புறப்பட்ட நும் மகளுடைய செய்கை அறத்தின் பாற்பட்டதே, அறங்களில் தலையாய இல்லறம் ஏற்க அவள் முடிவு செய்தது ஏற்புடைத்தே!" என்று செவிலித் தாய்க்குத் தேறுதல் கூறுகிறார். அவளும் ஆறுதல் அடைகிறாள். இக்காட்சியை, பாலைக்கலி, 9-ம் பாடல் அழகுறச் சித்தரிக்கிறது :

எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்
உறித் தாழ்ந்த கரகமும் உரை சான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவலசைஇ வேறு ஓரா நெஞ்சத்து
குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை அந்தணீர்
வெவ்விடைச் செலன்மாலை ஒழுக் கத்தீர் இவ்விடை
என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும்
தம்முளே புணர்ந்த தாம் அறி புணர்ச்சியர்
அன்னார் இருவரைக் காணீரோ பெரும
காணேம் அல்லேம்; கண்டனம் கடத்திடை
ஆணெழில் அண்ணலொடு அருஞ்சுரம் முன்னிய
மாணிழை மடவரல் தாயிர் நீர் போறிந்
பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம் என்செய்யும்
நினையுங்கால் நும்மகள் நும்க்குமாங்கு அனையளே;
சீர் கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லாதை
நீருளே பிறப்பினும் நீர்க்வைதாம் என் செய்யும்
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங்கு அனையளே;
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க் கவைதாம் என்செய்யும்
சூழும்கால் நும்மகள் நுமக்குமாங்கு அனையளே;
எனவாங்கு,
இறந்த கற்பினட்கு எவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்
அறந்தலை பிரியா ஆறு மற்று

—பாலைக்கலி பாடல் 9. [அதுவே.

அவரும் - நாமும்!

★ தமிழ், தெலுங்கு, மலையாள, கன்னட நாடுகளை இணைத்து - அந்த இணைப்பை வடவர் ஆதிக்கத்தின் கீழ் அடிமைப்படுத்தும் ஆச்சாரியாரின் தட்சிணப் பிரதேசம் எனபது ஒரு ஊறுகாய்ப் பானை.

ஆனால்,

★ நாம் கேட்கும்—மொழி வழி பிரிந்து இன வழி ஒன்று படும் திராவிட நாடோ ஒரு ஒளி விடும் நாலு கல் மூக்குத்தி !

செய்தியும் - சிந்த...



பஸ்களிலே மக்களுக்குப்பதில்ஆயுதம் ஏந்திய போலீஸ்காரர்களே பிரயாணம் செய்தார்கள்.

பார்த்தாலே பரம சாது என்பர்—சூது வாது அறியாத தூயவர் என்ற பட்டம் அவருக்கு! அந்த வட்டாரத்து மக்களுக்கு அவரது பெயர் சுவை தரும் இசையாக அமைந்து விட்டது. மந்திரிகளை, பண பலம் படை பலம் மிகுந்தவர்களை நேர்மை வழி நின்று எதிர்த்து வாகைமாலை சூடியவர் அவர். பணத்தால் ஏழை! பண்பால் பெருநிதியுடையவர்! சட்ட மன்றத்தை அலங்கரிக்கும் தகுதியும், துட்டர்தம் துடுக்கடக்கும் வாதத் திறனும் படைத்தவர். தியாகத்திற்கு அழகிரியின் அடிச் சுவட்டைத் தேர்ந்தெடுத்து—கண்ணியம் காப்பதிலே அண்ணாவின் பொன்மொழியை வேதமெனக் கொண்டு பணியாற்றும் பாட்டாளிக் குடிப் பிறந்த நல்லார், அவரைத்தான் கொள்ளைக்காரன் என்று குற்றம் சாட்டியிருக்கிறது; கொடுமைக்குப் பெயர்போன இந்த சர்க்கார்.

பிப்ரவரி இருபதாம் நாள் தமிழகத்தில் எழுந்த அறப் போரிலே ஈடுபட்ட காரணத்திற்காக தோழர் கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கட்கு விருதுநகராரின் பச்சைத் தமிழாட்சி பரிமாறியிருக்கும் "விருது" இது!

விஷத்தைக் கையிலே கொடுத்து "பருகடா இந்த உயிர் பருகும் பாயசத்தை!" என்று கட்டளையிட்டிருக்கலாம்; அதைவிடக் கடுமையான குற்றச்சாட்டை கண்யத்தின் காவலர்கள் மீது காமராசர் சர்க்கார் கொட்டியிருக்க வேண்டாம்.

கொள்ளைக்காரர்கள் போல தேவிகுளம்-பீர்மேட்டை அபகரித்துக் கொண்டவர்களுக்கு சாமரம் வீசிவிட்டு, சந்தனம் பூசிவிட்டு, சப்ரகூட மஞ்சத்தின் தூசி தட்டிவிட்டு சயன கலா தேவியாக வீற்றிருக்கும் நிலை பெற்றுவிட்டவர்கள்— விடுதலை வீரர்களைப் பார்த்து கொள்ளைக் குற்றம் சாட்டுகிறார்கள் என்றால் கொந்தளிக்கும் கடலாகத்தான் மாறுகிறது நெஞ்சம்! அய்யகோ! இந்தக் கொடுமைக்கெல்லாம் ஒரு முடிவே இல்லையா?

★

முடிவு இல்லை என்று நினைத்துத்தான் முண்டா திருப்பிக் காட்டுகிறது சர்க்கார்! இல்லாவிட்டால் ஏறத்தாழ இரண்டாயிரம் தோழர்களை உரிமை கேட்ட குற்றத்திற்காக கூண்டிலே அடைத்துப் பூட்டி வைப்பார்களா? தஞ்சை தந்த செல்வம் என். எஸ். இளங்கோ, சென்னை வீரர் முனிசாமி எம். சி., அலமேலு அப்பாதுரை, சரோஜினி அம்மையார், கோவைக்குரல் இராசமாணிக்கம், திருச்சி தீரர்கள் தருமு எம்.எஸ். மணி, முத்துகிருஷ்ணன் ஆகியவர்கள் உள்ளிட்ட ஏராளமான தோழர்களை "விலங்கு" கௌவிக் கொண்டது பிப்ரவரி 20ல்! மாவட்டந்தோறும் நூற்றுக் கணக்கானவர் கைது செய்யப்பட்டு கூட்டிலே அடைக்கப் பட்டனர், அவர்கள் மீதெல்லாம் என்னென்ன உருவத்திலே வழக்குகள் பாயப்போகின்றனவோ? எப்படி யெப்படி பழி தீர்த்துக் கொள்ளப் போகிறதோ பச்சைத் தமிழராட்சி!

கண்ணீர்ப்புகை, தடியடி, துப்பாக்கிப் பிரயோகம், இவ்வளவு அடக்குமுறைகளையும் கட்டவிழ்த்து விட்டு விட்டு காரணம் காட்டுவதற்கு "கலவரம்" என்ற முலாமும் பூச ஆரம்பிக்கிறது!

உரிமை கேட்டு அறப்போர் தொடங்குவதற்கு **கலவரம்** என்று பெயராம்! காமராசர் சர்க்கார் அப்படித்தான் கூறுகிறது.

★

காமராசர் சர்க்கார் என்ன; நமது விடுதலை ஏடும் அப்படித்தான் குறிப்பிடுகிறது! தடியடிபட்டு, தமும் புகளேற்று காயமும் காயாமல் தவித்துக் கிடக்கும் தமிழ்ப்பெரு மக்களை யெல்லாம் கலகக்காரர்கள் என்று நாமகரணமிட்டு அழைப்பதிலே விடுதலை இதழ் தனி மகிழ்ச்சி காணுகிறது. வேலை நிறுத்தம், வெற்றி பெற்று விட்டது என்பதை



சென்னைக் கடற்கரையில் வெள்ளம் போல் தமிழர் கூட்டம்.

காங்கிரஸ் ஏடுகளாலேயே மறைக்க முடியாமற் போய் விட்ட போது, விடுதலை துணிந்து இருட்டடிப்பு வேலையிலே இறங்கி யிருக்கிறது!

சென்னை நகரத்திலே கடையடைப்பு எவ்வளவு பெரும் வெற்றிகரமாக இருந்தது என்பதை படம் போட்டுக் காட்டியது சுதேச மித்திரன்! நகரிலே ஒரு கடைகூட இல்லை; ஊர்வலத்திலும் பொதுக் கூட்டத்திலும் கலந்து கொண்ட மக்கள் உண்பதற்கு எதுவும் கிடைக்காமல் தவித்தனர். நல்ல வேளையாக கடலை மட்டும் கிடைத்தது அவர்களுக்கு! அதனல் கடலைவியாபாரம் கொடி கட்டிப் பறந்ததுஎன்று சுதேச மித்திரனே வர்ணிக்கிறது! விடுதலையாருக்கோ நமது வெற்றி, தோல்வியாகத் தெரிகிறது பாவம்!

தேவிகுளத்திலே ஐம்டதாயிரம் தோட்டத் தொழிலாளர், கோலார் தங்கவயலில் பதினைந்தாயிரம் சுரங்கத் தொழிலாளர், சென்னை பக்கிங்காம் கர்னட்டிக் மில்லில் பனிரெண்டாயிரம் தொழிலாளர், விம்கோ, சிம்ஸன், முதலிய தொழிற்சாலைகளில் பெரும்பாலோர், இன்னும் ஆங்காங்கே உள்ள ஆலைத் தொழிலாளர்கள் அனைவரும் பொதுவேலை நிறுத்தத்திலே ஈடுபட்டு, தாங்கள் உண்மைத் தமிழ் உணர்ச்சி கொண்டவர்கள் என்பதை நிலைநாட்டிக் கொண்டிருக்கிறார்கள். கு... தூரிலே ஐபாயிரம் நெசவா... தறியின் பக்கமே போகவி... கரூரிலே பத்தாயிரம் பேர் கை... நெசவாளர்கள், தமிழர் ... போரிலே கலந்து கொண்டிரு... றனர். தமிழகமெங்கணும் ... கள் அடைபட்டுக் கிடந்தன. ... பாலான இடங்களில் போக்கு... துகள் ஓய்ந்து கிடந்தன. ... பட்டியல் அல்ல; தேசிய வட்டா... ஏடுகள் தரும் விவரம்!

இதோ சில விடுதலையாரின் ... வைக்கு வைக்கப் படுகின்றன.

"சென்னையில் சைனா ... கொத்தவால் சாவடி, ... பஜார், மவுண்ட்ரோடு, ... விக்கேணி, புரசை... பெரம்பூர் முதலிய ப... லெல்லாம் கடைகள் அடை... கிடந்தன. ரஸ்தாக்கள் ... சென்று காட்சியளித்தன."

"இன்று வேலூரில் ... பஸ்களும், வெளியூர் பஸ்... ஓடவில்லை."

"கடலூர் டவுன் இன்று பூ... ஹர்த்தால் அனுஷ்டித்தது. ... சில கடைகளைத்தவிர எல்... கடைகளுமேமூடப் பட்டிருந்தன. பஸ்கள், காலியாகச் செல்கின்றன. ரிக்ஷாக்கள், ஜட்காக்கள் ஓடவில்லை."



"மதுரை நகரில் உள்ள எல்லா துணி, மளிகை, நகைக் கடைகளும் மூடப் பட்டிருந்தன."

"இன்று காஞ்சீபுரத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்ட... சென்னையிலிருந்து வந்த சர்க்கா... பஸ்களும், உள்ளூர் வாட... வண்டிகளும் தவிர மற்ற... போக்கு வரத்து ஸ்தம்பித்து ... டது."

"விழுப்புரத்தில் கடை... எல்லாம் மூடப்பட்டன. பள்... கூடங்களுக்கு சுமார் அறுபத்... விகித மாணவர்கள் போ... வில்லை."

"திருச்சியில் எல்லா ஷே...

மேலும் எழுதுமுன் கவனிக்க இதைச் சமர்ப்பிக்கிறேம்

"பிப்ரவரி 20 படிப்பினை" என்று ஆராய்ச்சி நடத்துகிறது "விடுதலை", தொடருமாம்! எனவே, மேலும் எழுதுமுன், இதைக் கவனத்தில் கொள்வது நல்லது என்று சமர்ப்பிக்கிறேம்; ஏனெனில், முதலிலேயே தவறு செய்யாமலிருப்பது நல்லதல்லவா?

"இந்த செயற் குழுவில், மேற்படி தினசரியின் ஆசிரியரான திரு. ஆதித்தன் அவர்களும் ஒருவர் என்பதை வாசகர்கள் மறந்து விடக் கூடாது." என்று 'விடுதலை' கூறுகிறது.

வாசகர்களுக்கு, விஷயதானம் அளிப்போருக்கு நாம் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால், ஆதித்தன் இந்தச் செயற் குழுவில் உறுப்பினர் அல்ல; ஆலோசனைக் கூட்டத்திற்கு வந்தார்; ஆனல் செயற் குழுவில் இல்லை.

எனவே, அடுத்த கட்டுரையில், 'சுருதி' இப்படி மாறினல் சங்கீதம் இனிக்கும் என்று கருதுகிறேம்; எப்படி என்றால், "ஆதித்தன் கூட இதை மதிக்கவில்லை—சேரவில்லை; அப்படிப் பட்ட அல்பமான கிளர்ச்சி இது," என்று மாற்றிக் கொள்ளலாம். தொடரட்டும்! தொடரட்டும்! இருபது நாள் வேலைத் தொல்லைக்குப் பிறகு எங்களுக்கும் வேடிக்கையும், பொழுது போக்கும் வேண்டாமா? தருக! மகிழ்கிறேம்!

—தடியடி பட்டோர்

(நம்நாடு)



ஆளுங்கட்சியின் அமோக எதிர்ப்...

ர்த்தால்! வெற்றி! வெற்றி!

ம் - சில தூளிகள்!

'பள்ளிக்கூடங்கள் பலவற்றிலும் இன்று மாணவர்கள் பலர் வகுப்புகளுக்குச் செல்ல வில்லை'
(சு. மி.)

ளும், காய்கறி மார்க்கெட்டும் டிகள் உட்பட எல்லாக் கடை ம் மூடப்பட்டன. ஒரு சினி கொட்டகை தவிர பாக்கி ாம் இன்று விடுமுறை, று முன்பே அறிவிக்கப்பட்டு து. டவுன் பஸ்கள் சில லீசாரின் தலையீட்டால் பிறகு ஆரம்பித்தன."

காரைக்காலில் பூரண ஹர்த் அனுஷ்டிக்கப் பட்டது."

புள்ளவை பிப்ரவரி 21-ம் த்திரனில் வெளிவந்த செய் இத்தகைய வெற்றி மணக் வாங்களை விடுதலை மறைக் ர்க்கிறது! பயந்துகொண்டு லர் கடைகளை மூடினார்கள் காரணம் எழுதிக் களிப் றது! தேவிகுளம் பீர்மேடு யில்லை; தட்சிணப் பிரதேசம் டும் என்று எண்ணுகிற கள் பெரும் பான்மையோர் ளார்கள் என்று பறைசாற்றும் கிரஸ் பிரமுகர்களுக்கும், லயாருக்கும் என்ன வித்தி ருக்கிறதோ தெரியவில்லை! ாயிலே, அண்ணாவும் சர்வ தலைவர்களும் பேசிய 19-ந் பொதுக் கூட்டத்தில் மூன்று லட்சம் மக்களுக்கு மேல் கலந்துகொண்டனர். கடலலையோடு போட்டி போட்டது அந்தக் கூட்டமென சென்னை நகரமே வியந்து பேசுகிறது!

கோவையிலே கருணாநிதியும் சர்வகட்சித் தோழர்களும் பேசிய கூட்டம் இரண்டு லட்சம் மக்களைக் கொண்டிருந்தது! சிதம்பரம்பூங்கா

ட்டிப்
(சு. மி.)

வழிந்தது மக்கள் வெள்ளம், களும் தலைவர்கள் லட்சோப மக்களை எதிர் நிறுத்தி பரணி பாடியிருக்கிறார்கள். மக்கட் பெருங் கடலை, அந்த த்திலே கலந்திருந்த தாய் விடுதலை வெறியை— சியார் தனது பேனா முனை மறைத்து விடலாமென்று வது பரிதாபத்திற்குரிய க!

ிய பாசத்தால் நாம் விடுக்கும் டுகோள்; "அண்ணே! வேண்டாம் இந்த விபரீதச் செய்கை! விருது நகராரை ஆதரிப்பதற்காக, எம்மீது சீற வேண்டாம்"—என்பது தான்!

அவரது சீற்றத்தால் நாம் சிந்தை கலங்கி, நமது அணி சிதறி விடப் போவதில்லை! தலைமுறை தலைமுறைக்கும் **தமிழர் உணர்ச்சியை எள்ளி நகையாடினார்** என்ற நீங்காத பழியை அவர் சுமக்க வேண்டுமே என்றுதான் கவலைப் படுகிறோம். காட்டிக் கொடுப்பதற்கும் ஒரு அளவு இருக்கிறது—



இரண்டாயிரம் தோழர்களை 'விலங்கு' கௌவிக் கொண்டது!

தமிழர் சமுதாயத்தையே காமராசர் மூலமாக வடநாட்டு நேருவின் முன்னே காட்டிக் கொடுப்பதானது, கழுவாய் தேட முடியாத குற்றமாகும்! விடுதலையாரால் ஆதரிக்கப்படும் இந்தக் காமராசர் யார்?

★

சென்ற பொதுத் தேர்தலிலே விடுதலையாரால் காரசாரமாகத் தாக்கப்பட்டவர்தான்! ஒப்பந்த ஏட்டிலே கையெழுத்திட வில்லையென்று நாம் திரு. ஜி.டி. நாயுடுவை ஆதரிக்காமல்—கையெழுத்திட்ட ஆறுமுகசாமி என்பவரை ஆதரித்த போது, விடுதலை ஜி. டி. நாயுடுவுக்காக வரிந்து கட்டிக் கொண்டு, காமராசரைத் தாக்கி மகிழ்ந்தது—நம்மைக்கூட காமராசரின் கையாட்கள் என்று திருவாய் மலர்ந்தருளியது! அதே விடுதலைதான் இன்று காமராசரை நிபந்தனையின்றி ஆதரிக்க முற்பட்டு, தமிழ்ப் பெருங்குடி மக்களை, காலிகள் என்றும்—கலவரக்காரர்கள் என்றும் அர்ச்சிக்க முன் வந்திருக்கிறது! பிள்ளையார் உடைப்புப் போராட்டத்தின் போது எத்தனையோ இடங்களில் ரத்தக் களரி ஏற்பட்டதே; அதை இதற்குள் மறந்து விட்டு—நமது அறப் போரின் போது எதிர்பாராமல் ஏற்பட்ட சில அசம்பாவிதங்களுக்கு முக்கியத்தும் அளித்து, நமது பிரச்சினையின் அவசியத்தையே மூளியாக்கப் பார்க்கிறது!

"பெரியாரின் முகமூடியைக் கிழித்தெறிகிறேன்!"

"திராவிட எழுத்தாளர்களின் கட்டை விரல்களை வெட்டி எறிகிறேன்"

என்றெல்லாம் வீரவுரையாற்றிய விருது நகரார்தான் இன்று விடுதலையின் ஆதரவிலே அமைச்சு கட்டிலில் அமர்ந்து கொண்டு, துப்பாக்கித் துரைத்தனம் நடத்துகிறார்.

★

மனமாச்சரியமுள்ளவர்கள் ஒற்றுமைப் படவே கூடாது என்பதல்ல நமது கருத்து! அப்படி எண்ணியிருந்தால் சர்வ கட்சி கூட்டணியே அமைந்திருக்க வழியின்றிப் போயிருக்கும்!

கொள்கையிலே, திட்டத்திலே, குரலிலே வேறுபாடு கொண்டவர்கள்—பொதுப் பிரச்சினையிலேகூட, கூடிக் காரியமாற்ற விரும்பவில்லையென்றால், அவர்கள் கட்சி நடத்துவது கலப்பில்லாத சுயநலத்திற்காகவே யென்பது உண்மையாகி விடும்! கூடிக்காரியமும் ஆற்றாமல், கழுத்தறுக்கவும் துணிந்து விட்ட காமராசருக்குத் துணை போகும் நிலைமையிலே நமது தந்தையார் ஏடு வந்து விட்டதேயென எண்ணும் போது விழி குளமாகிறது! வேதனை துளைக்கிறது!

நடந்து முடிந்த வேலை நிறுத்தத்தைப் பற்றி விடுதலை தொடர் தலையங்கம் தீட்டப் போகிறதாம்! ஆண்டு முழுவதும் அலுப்பின்றித் தொடர் கட்டுரை வரைந்து கொண்டிருந்தாலும் அறப்போரிலே பெரியார் ஈடுபடாததற்கான உண்மையான காரணத்தை விடுதலையால் வெளியிட இயலாது! நமக்கோ வெளியிட வெட்கமாயிருக்கிறது!

தொடர்ந்து எழுதட்டும் விடுதலை! அது எழுதி முடிப்பதற்குள், நம்மை நோக்கி எத்தனையோ பிரச்சினைகள் பயங்கர உருவெடுத்து வர இருக்கின்றன. சிறையிலே வாடும் தோழர்களை மீட்க வேண்டும், கொள்ளைக் குற்றம் சாட்டப்பட்டுள்ள கொள்கைக் குன்றங்களை குற்றச்சாட்டிலே யிருந்து விடுவிக்கப் பணிபுரிய வேண்டும்? அடக்குமுறையால் வடுப் பெற்ற காளையர்க்கு ஆறுதல் வழங்கிட வேண்டும்! அந்த இடை நேரத்திலே ஒரு தமாஷ் பொழுது போக்காகப் படிப்பதற்கு விடுதலையின் தொடரோவியம் பயன்படட்டும்!

★

நம்முடைய தொடரோவியம் சித்தாதிரிப்பேட்டை விடுதலையோடு மூடிவதல்ல! சிங்காரத் திராவிடத்தின் விடுதலைக்கு வழி காட்டும் தொடரோவியம்!

செங்குருதி தனில் எலும்புத் தூரிகை தோய்த்து எழுதப்படும் புறநானூற்றுத் தொடரோவியம்! நமது போர்க்காவியம்!

"அந்தப் போர்க் காவியத்தின் எழுச்சி வரிகளாக நாம் அமைய மாட்டோமா?" என ஆயிரமாயிரம் வீரர்கள் துடித்து நிற்கிறார்கள்! ஆணையிட்டால் போதும்—எதிரிகளின் சேனைதனை எருவாக்கி ஜெயக்கொடி படர விடுவோம்—என சூளுரைக்கும் சூரர் பல்லோர்! அவர்தம் இதய முரசமாகத்தான் அமைந்து விட்டது பிப்ரவரி 20! யாரும் எண்ணாத அளவில்—எதிர்பாராத வகையில், எதிரிகளும் நடுங்கும் விதத்தில்—இணையற்ற வெற்றி கிடைத்து விட்டது. இனி; அடுத்த திட்டம் என்ன என்று தமிழகம் எதிர்பார்த்து நிற்கிறது! தலைவர்கள் கூடிட இருக்கின்றனர் விரைவில்!

கோரிக்கை வெற்றி பெறும் வரையில் போர்க்கொடி பறந்து கொண்டே யிருக்கும்!

இதைக் கோலேந்திகளும், அவர்தம் தாளேந்திகளும் உணர வேண்டும்!

★

'ஹர்த்தால்' வெற்றி பெற்றது!

வருந்துகிறோம்

வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கெதிராக, உரிமைக் கொடியை உயர்த்திய நாள்முதல் சுமார் 30 ஆண்டு காலமாக பொது வாழ்விலே ஈடுபட்டு, தியாகத் தழும்புகளை ஏற்றவரும், சோஷலிஸ்டுக் கட்சி தலைவராய் இருந்தவருமான—ஆச்சாரிய நரேந்திரதேவ் தமது 67-வது காலக் கோட்டில், இயற்கை எய்தினார் என்ற சோகச் செய்தி இந் நாட்டு அரசியல் தொடர்பு கொண்டோரை யெல்லாம் துயரத்தில் ஆழ்த்தி இருக்கிறது.

தேவ், அரசியல் வாதியாக மட்டுமே வாழ்ந்து மறைந்தவர் அல்லர்; இலட்சுமணபுரி, காசி பல்கலைக் கழகங்களின் துணை வேந்தராயும் பணி புரிந்திருக்கிறார். நேர்மைமிக்க அரசியல்வாதிகளுள் முன்னோடியான இவர் மறைவு, அவர்தம் குடும்பத்தாருக்கும், தோழர்களுக்கும் தந்திருக்கும் துயரத்தில் நாமும் பங்குபெற்று, நம் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

காகபட்டரே, காலம் தாங்காது!

அறுபதினாயிரம் தங்கக் கிளிகளின் தேக காந்தியிலே—தேன் இதழிலே மயக்கிடந்த தசரத மகா ராஜா—ராம, லட்சுமணர்களை கம்பதாசர்களுக்குத் தந்துவிட்டு செத்துப் போனார் என்றுதான் நமக்கெல்லாம் புராணங்கள் சொல்லிற்று :

ஏகபத்தினி விரதன் ('ஏக' என்றால்—கிராமத்து பாணியில் 'ஏகப்பட்ட' அதாவது ஏராளமான என்ற பொருள் கொள்க!) தசரதனை அறிவுலகத்தைச் சார்ந்தவர்களும்—பகுத்தறிவு வாதிகளும், மங்கையரின் மோகத் தட்டிலே புரண்டுகிடந்தவன் என்று கூறு கின்றனர்; அது உண்மை! அதன் காரணமாகவே, அந்த பெண் வெறியன் பெற்றெடுத்த புத்திர பாக்கியமாம், ராமனும், தந்தைக் கேற்ற 'நற்குணங்களை'க் கொண்டவனாக நல்லொழுக்க நங்கையாம் ராவணனின் தங்கையிடமும்-தவறான முறையில் நடக்க முயற்சித்தான் என்று ஆராய்ச்சியாளர்கள் முடிவு தருகிறார்கள்; இதெல்லாம் நமக்குத் தேவையில்லாதது; செல்லாக் காசாகிவிட்ட, புராணப்பசைகள்! செத்துப் போன தசரதன், இந்த உபகண்டத்தில் ஏன் பிறந்தானோ பாவி! (பிறந்தது உண்மையாக இருந்தால்) இந்நாட்டு மக்களின் ஒழுக்கத்திற்கு மாசு கற்பிக்க; என்று நாமெல்லாம்—வருந்திக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில டில்லிமா நகரிலே புதிய தசரதனை நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தி இருக்கின்றனர் :

யார் அந்த நவீன தசரதன்? எந்த ராவணனை மயக்க—மருமகளை தென்னகத்திற்கு அனுப்பப் போகிறான்? ஆரிய-திராவிட இறுதிப் போராட்டமா இப்பொழுது நடக்கப் போவது? என்றெல்லாம் கேட்டு விடாதீர்கள் !

இந்த நவீன தசரதன், ராமனின் தந்தையுமல்ல—சீதையின் மாமனும் அல்ல! இந்திய உபகண்டத்தின் தலைவர்! ஆம் ஜனாதிபதி! ராஜன் பாபு அவர்கள்தான்!

இந்த 'சாதுவான' மனிதரை நாட்டின் நாயகரை—எந்தப் பாவிகள் இப்படி அவமானப் படுத்தி இருக்கிறார்கள—'தசரதன்' என்ற நாமதேயத்தை சூட்டி-என்று எண்ணுவீர்கள்!

நாட்டிலே 'நிர்வாணமாக' உலவுகின்ற அளவிற்கு சர்க்காரிடம் 'லைசென்ஸ்' பெற்ற புண்ணிய மூர்த்திகள்தான் ஜனாதிபதியை தசரதனாக்கி—அதே நேரத்தில்-தங்கள் நிலையையும் உயர்த்திக் கொண்டனராம் !

'ஜனாதிபதியை தசரதனாகவும் தங்களை மன்னர்களுக்கு ஆலோசனை கூறும் முனிவர்களாகவும் ஒப்பிட்டனர்; மேலும் அவருக்கு நீண்ட ஆயுளை அளிக்கவும், அந்த சாதுக்கள் ஆண்டவனை வேண்டிக் கொண்டனர்' சுதேசமித்திரன் ஏடு இப்படி இந்த செய்தியை சுவைபட வெளியிட்டு பெருமைப் பட்டுக்கொள்ளுகிறது!

★ ★ ★

ராஜன் பாபுவை தசரதனாக்கியதோடு விடவில்லையாம் இந்த 'விஸ்வாமித்திரர்கள்'. 'மகான்' என்ற ஒரு பட்டத்தையும் அவர் தலைமேல் தூக்கி வைத்திருக்கிறார்கள்: அதோடு விட்டார்களே 'புனிதர்கள்' அவரையும் நிர்வாணமாக்கி குடந்தைக் கும்பமேளாவிற்கு இழுத்துக் கொண்டு வராமல்—அந்த அளவில நமக்கெல்லாம் மகிழ்ச்சிதான் !

இந்த பட்டமளிப்பு விழாவும், புதிய 'மகான்' அரங்கேற்ற நாடகமும், எந்த இடத்தில் நடந்தேறி இருக்கிறது தெரியுமா? நமது ராஷ்டிரபதி பவனத்திலதான்!

'சாது சமாஜத்தின்' தலைவர்கள்கூடி, நாட்டின் நாயகருக்கு அளித்த இந்த 'மகான்' என்றபட்டத்தை ஏற்றுக்கொண்ட பிரசாத் அவர்கள் இரண்டொரு மணி மொழிகளையும் உதிர்த்திருக்கிறார்—அது இது !

''இந்த நாட்டில் சாதுக்களுக்கு ஏராளமான சிஷ்யர்கள் இருக்கின்றனர். ஆத்மீகத்தைப் பரப்புவது அவர்களின் கடமை, அனைவருடைய வாழ்க்கையில ஆத்மீகம் கலந்தால் தான் உலகில் சாந்தியும் சுபிட்சமும் நிலவும்''

எப்படி இருக்கிறது 'புதிய' மகானின் போதனைகள்: அதுவும ஒரு நாட்டின் ஜனாதிபதி! பேசி இருக்கிறார் இப்படி—பாவம! இதை எண்ணும்போது அவர்பால் நமக்கு அனுதாபம் எழத்தான செய்கிறது! சாதுக்களுக்கு ஏராளமான 'சிஷ்யர்கள்' இருக்கிறார்களாம்! ஏன் இருக்கமாட்டார்கள்? ஒரு குடியரசின் தலைவர 'ராஷ்டிரபதி பவனத்தில' சந்நியாசிகளுக்கு பாத பூஜை செய்து கொண்டிருக்கும்போது!

இப்படி 'பலரக'சீடகோடிகள் இந்த ஏமாளி நாட்டில் இருப்பதால்தான; மலைபோன்ற உடல்பெற்ற சோம்பேறிகள்கூட, சாம்பல் பூசிக்கொண்டு சாதுக்களாகக் கிளம்பிவிடுகின்றனர்; அந்தப் போர்வையிலே புகுந்து கொண்டு திரிபவர்களுக்குக் கிடைக்கின்ற 'ரசமான' வாழ்வு.கூட மனிதர்களாக இருப்பவர்களுக்கு கிடைப்பதில்லையே!

பிறகெப்படி 'சீடகோடிகள்' இல்லாமல் போய்விடுவார்கள்!

குடியரசுத் தலைவரிடம் 'சாது' வேடத்திலே வந்தவர்களின் முன்னோடி ஒருவர் சொன்னாராம் ''ஆட்சி புரிவோரும, சாதுக்களும் ஒன்றுபட்டு அரசியல் நடத்தும காலம வந்துவிட்டது; அந்தக் காலத்தில மன்னர்களுக்கு சாதுக்கள்தான மதியந்திரிகள்?'' என்று; சாம்பல் பூசியாக இருந்தாலும, அந்த சந்நியாசி கொஞ்சம் புத்தியுள்ளவர்போல தெரிகிறது; அவா போட்டிருக்கும் பீடிகையைப் பார்த்தால!

ஜனாதிபதியை தசரதனாக்கி—தன் கூட்டத்தை விசுவாமித்திரனாக்கி ஒருபடி உயர்த்திக் கொண்டு;

''ராஜன்பாபு அவர்களே! உங்களுக்கெல்லாம், ஆலோசனைக் கூறுகிற அளவிற்கு நாங்கள் புத்திசாலிகளாக்கும்!'' என்று சொல்லாமல் சொல்லி; குடியரசுத் தலைவரை 'இளிச்சவாயராக்கி' இருக்கிறார்கள் பரிதாபம் !

அதற்கு ஜனாதிபதியவர்களும்; ஆத்மீகத்தை வளர்த்து, மதத்தைக் காப்பாற்ற வேண்டும் என்றும் 'மங்களம்'பாடி முடித்திருக்கிறார்!

சாதுக்களின் மந்திர உச்சாடனத்தோடு, இந்திய மண்ணிற்கு புதிய 'மகான்' அரங்கேற்றம் செய்யப்பட்டிருக்கிறார்! வேடிக்கை!

பெரிய பெரிய மண்டலாதிபதிகளுக்கும்—மாவீரர்களுக்கும், மதமும்—அதை காப்பாற்றும் 'திருவாளர்'களும்தான் படுகுழி வெட்டி இருக்கிறார்கள்; இதனை சரித்திரத்தையும் கடந்து வந்திருக்கும் இந்த 20-ம் நூற்றாண்டில்தான்; 'ராஜகோட்டத்தை' உருவாக்கிய 'மதத்தை' இவ்வளவு விரைவிலே ராஜன் பாபு மறந்துவிட்டார்; மதத்தைக் கட்டிக் காக்கும் சாதுக்களை ராஷ்டிரபதி பவனத்திலே தட்டிக் கொடுத்திருக்கும் வெட்கக் கேடான செய்தி நம்மை யெல்லாம் தலைகுனியச் செய்கிறது.

★ ★ ★

மதத்தை சில 'பெரியமனிதர்கள்' ஏன் குரங்குப்பிடியாக பிடித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதற்கு ஒரு அருமையான காரணம் சொல்லுகிறான் நிமிர்ந்த நெஞ்சம்—நிலத்தில் யாருக்கும் அஞ்சாத பண்பும் கொண்ட நெப்போலியன்;

''மதம் சொர்க்கத்தைக் காட்டி ஏழைகளை மிரட்டுகிறது, அதனால் தான் ஏழைகள் சீமான்களின் தலைகளையும், ஆணவக்காரர்களின் இதயத்தையும் கிழிக்காமல் இருக்கின்றனர். ஏற்றத் தாழ்வுகளினால் தான் 'சீமான்கள்' என்ற ஒரு வகுப்பு வாழமுடிகிறது; ஒருவன் பட்டினியால் வாடுகிறான்; ஒருவன் விலா புடைக்கத் தின்கிறான்; இந்த பேதத்தை ஒரு 'பசியுள்ளவன்' எப்படி சகித்துக் கொள்ள முடியும்; மனித சக்திக்கு மீறிய ஒரு சக்தி தான் இதற்கெல்லாம் காரணம்; என்று அந்த 'ஏமாற்றப்படுபவன்—நம்பவேண்டும்! அந்த நம்பிக்கையை அவன் நெஞ்சத்திலே புகுத்தி அவன் ஆத்திரத்தை வேறுதிசையில் திருப்பிவிடும் முயற்சி தான் மதம்'' எவ்வளவு அழகான விளக்கம்! இப்படி சமுதாயத்தால் ஏமாற்றப் படுகின்றவனின்; கோபப்பார்வையை; இல்லாத ஒரு பொருளின் மீது மோதவிட்டு வேடிக்கைபார்க்கும் ஏமாற்று வித்தைக்குதான் 'மதம்'! என்ற பெயராம்!

இந்த மதத்தைதான் இப்பொழுது புனருத்தாரணம் செய்கின்ற 'திருத்தொண்டிலே' குடியரசின் தலைவராம் ராஜனபாபு இறங்கியுள்ளார்; பாவம்!

அதே நெப்போலியன் தான் ''சாக்ரடீசையும்—பிளாடோவையும் ஏற்றுக் கொள்ளாத மதத்தை நான்மட்டும் எப்படி ஏற்றுக் கொள்வேன்'' என்று கேட்டானாம்!

இப்படி 'அறிஞர்களை' விலக்கிவைக்கும் மதத்தை தான் ராஜன்பாபு போன்றவர்கள் இருகையேந்தி வரவேற்கின்றனர்—வாழ்த்துகின்றனர்; அந்தமதத்தை 'வளர்க்கின்ற 'கமண்டலமேந்திகளை'த் தட்டிக்கொடுக்கின்றனர்;

அறிஞர்கள் இடம்பெறாத அரங்கத்தில் தானே, ராஜனபாபு போன்றவர்களுக்கு 'ராஜபார்ட்' கிடைக்கிறது! இந்நிலையில் 'நிர்வாணச்சாமி'களுக்கு கைலாகு கொடுக்காமல்—கழுவிலா ஏற்றப்போகிறார்கள்?

* * *

அடிகளாரின் ஞானம்!

மனித சமுதாயத்திடம் அன்பு கொண்ட நல் இதயம் பெற்ற அரசியல்வாதிகளெல்லாம், 'உலக சமாதானத்திற்கு' ஓயாமல் போராடி வருகின்றனர்

பெரும்பாலான நாடுகள் வெண்புறாவைக் கையிலே தூக்கிக்கொண்டு சமாதான முகட்டிலே கம்பீரமாக ஏறி நிற்கின்றன.

நேசக் கரங்களும், நல்லெண்ண ஒப்பந்தங்களும் நாட்டுக்கு நாடு பரிமாறிக் கொள்ளப் படுகின்றன.

ஆச்சாரியார்கூட, இந்த விஷயத்தில் 'ஆத்மீகத்தை'க் கைவிட்டு, ஆயுதக் குறைப்புக்காக வல்லரசுகளுக்கு வேண்டுகோள் விட்டபடி இருக்கிறார்.

ஆனால்?

காமகோடி ஜெகத்குரு சுவாமிகள் உலக சமாதானத்திற்காக, புதிய வழி ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்! அணுகுண்டையும், ஜலவாயு குண்டையும் பொசுக்கிவிட மதுரை ஆலயத்திலே ஓமகுண்டத்தை எழுப்பி வேள்வி நடத்தப் போகிறாராம! எப்படி இருக்கிறது அடிகளாரின் ஞான திட்டம்?

நெறி தவறிய 'நீரோக்கள்'!

இலட்சிய தாகம் தணித்திட கொள்கை மடை திறந்திடுவோர்—

அறிவுச் சுடர் கொளுத்த விஞ்ஞானத் தீப்பந்தம் கொண்டு வருவோர்—

வீரப் பேச்சு மழை பொழிவோர்; குருதி கொப்பளிக்கும் வகையில் பழுதிலாத் திட்டங்களைத் தந்து கழுமரத்தில் ஊசலாடும் தாயின் உயிரைக் காப்போர்—

—இவர்கள்தான் கூடுவர், குன்றனைய தோள்களைத் தட்டிக்கொண்டு குனிந்த முதுகை நிமிர்த்திக்கொண்டு, எட்டுதிக்கும் எட்டுமளவு இலட்சியக் குரலை ஒலித்துக்கொண்டு!

இடுக்கித் தாக்கக் குதிரைப் படைகள் வேண்டுமா? ஈர் மழுங்கா ஈட்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு? வேல் வேண்டுமா? வேழம் வேண்டுமா?— என்று தார் புனைந்த தலைவனைப் போல ஆணைகளை விடுப்பவர்கள் இன்று ஆமைகளைப்போல அடங்கி விட்டார்கள்!

வீரர்களின் அணிவகுப்பைப் பார்த்து விம்மிய தோள்களெல்லாம் இன்றுதொட்டாற் சுருங்கியைப்போலக் குன்றிப்போய் விட்டன!

ஆம்; அன்று காங்கிரஸ்கட்சி கண்ணிலே கனல் சிந்தி, வெள்ளைக்காரக் கொள்ளையரைக் கட்டழிக்க புறப்பட்ட காட்சி எப்படியிருந்தது!

தலைவர் ஆணையிட்டால் தலையால் நடந்தல்லவோ ஓடிவந்தனர், மக்கள்!

மாநாடு கூட்டுவார்கள்; அப்போது கேட்போர் இதயங்களிலே எழுச்சி வித்துக்களையல்லவா விதைத்தனர்!

இன்று மாநாடு என்றால் ஆள் தேட வேண்டிய கட்டமல்லவா ஏற்பட்டிருக்கிறது!

கையிலே கட்டுச் சோற்றுடன், நெற்றியிலே வழியும் வியர்வை ஊற்றுகளைத் துடைத்தபடி, ஆர்வத்தால் சுழித்த புருவமும், ஏகாதிபத்யக் கூட்டத்தை எலும்பொடு கழித்தெறியும் வலுவும்கொண்டு பல தொலைவு நடந்தல்லவா இலட்சிய உணவு பெற்றனர்!

அவர்கள் தலைவர் காந்தியடிகள்தான் என்ன; வழி நடப்பதற்குச் சளைத்தவரா? இல்லையே!

ஆனால் இன்றோ அமிர்தசரஸ் மாநாட்டிலே அந்தக் காட்சியைத் தலைகீழாக மாற்றிவிட்டனர்.

அந்த மாநாட்டின்போது ரெயில்வே அதிகாரிகள் விடுத்துள்ள அறிக்கையைப் பாருங்கள்:

8-2-56 முதல் 20-2-56 வரை அமிர்தசரஸ், ஜலந்தர் வழி செல்லும், இருநூறு மைல்களுக்குக் குறைந்து பிரயாணம் செய்வோர், மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்ய முடியாது.

★

1-2-56 முதல் 12-2-56 வரை மொகல் ராய்க்கும் அமிர்தசரசுக்கும் செல்லும் ரயில்கள் மூன்றும் வகுப்புப் பிராணிகளை ஏற்றிச் செல்ல மாட்டா ஏன் இந்த உத்தரவு?

காரணம் வேறொன்றுமில்லை.

காங்கிரஸ் மாநாட்டிலே வருவோர் முதல் வகுப்பிலும், இரண்டாம் வகுப்பிலுமே பிரயாணம் செய்வராம்.

அந்த உயர்தர வகுப்புப் பிரயாணிகளுக்காக மூன்றும் வகுப்புப் பெட்டிகள் இணைக்கப்படவில்லையாம்!

1911-ம் ஆண்டிலே ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி டெல்லியிலே தன்னுடைய ஆடம்பர மிக்கத் தர்பாரை நடத்திய போதுகூட, அந்தக் காட்சியை ஏழைகளும், நடுத்தரவர்க்கத்தினரும் கண்டு களிக்க விசேஷ ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். ஜார்ஜ் மன்னரது சபைக்கு வருவோர், விருந்து மண்டபத்திலே கலந்து கொள்வோர் பட்டுடை அணிந்து தோரும், ஜரிகைக் குல்லாய் தரித்தோரும் தான்!

ஆனால் அன்றைய தினம்கூட பிரத்யேகமாக மூன்றும் வகுப்புப் பிரயாணிகளைச் சுமந்து செல்லும் ரயில்கள் தலைநகரை நோக்கிப் பறந்தன!

இன்றுதான்—ஜனநாயகம் பேசுவோர் மாநாடு கூட்டியிருக்கும் இந்த நேரத்திலேதான்— மூன்றும் வகுப்புப் பிரயாணம் செய்வோர் வருவதற்கு வசதி செய்து தரவில்லை; அவர்கள் அமிர்தசரஸ் நோக்கி வரவும் இல்லை!

வந்த கதர்க்குல்லாய்கள் யாவும் பஞ்சுமெத்தைகளின் சுகத்தை அனுபவித்த வண்ணம் முதல் வகுப்பிலும் மூன்றும் வகுப்பிலுமாகப் பிரயாணம் செய்திருக்கின்றனர்!

ரத்தம் குடிக்கும் மூட்டைப் பூச்சிகள், முடை நாற்றம் வீசுகின்ற அழுக்கேறிய தரை, உயிரற்ற ஜந்துக்களைப்போல ஒருவர் மீது ஒருவராய் அடுக்கி வைக்கப்படும் பிரயாணிகள்— மூன்றும் வகுப்பில் வந்திருந்தால் அந்தக் காங்கிரஸ் கனவான்கள் இந்தக் காட்சியையெல்லாம் கண்டிருக்கலாம்! உண்மை நிலையை — நாட்டு நடப்பை ஓரளவு உணர்ந்திருக்கலாம்!

மகாத்மா காந்திகூட மூன்றும் வகுப்பிலே பிரயாணம் செய்துதான் இவ்வளவு பெரிய கோட்டையைத் தனது சீடர்களுக்குக் கட்டிக்கொடுத்தார்!

அவர்களோ அதை உதாசீனப்படுத்திவிட்டு, உல்லாச யாத்திரைப் புறப்பட்டுச் சென்றிருக்கின்றனர்!

சோஷலிச சமுதாயத்தில் செய்ய வேண்டிய பணிகளைப் பற்றிய தீப்பொறி பறக்கும் தீர்மானங்கள் அமிர்தசரஸ் கூடாரத்தில்!

—ஆனால் அவர்கள் ஏறி வந்ததோ முதலிரண்டு வகுப்புப் பெட்டிகளில்!

பருகியது பழரசம்; கை கழுவியது பன்னீரில்—பேசியதோ பட்டினிப் பட்டாளங்களின் பெருமைபற்றி!

நடந்து வந்தது நடைபாவாடை விரித்த முல்லை பரப்பிய நிலத்தின்மீது—சென்று பேசியதோ ஏழைகளின் கண்ணீரைப்பற்றி!

இதே கதைதான் பல நூற்றுண்டுகளுக்கு முன்பும் நடந்தது:

நீரோ மன்னன் எரித்தது உயிருள்ள மக்கள் உலவும் ரோமாபுரி நகரத்தை!

காரணம்?

புதிய பெரிய தலைநகரம் உண்டாக்குவதற்காக!

இவர்களும் அப்படித்தான்!

பஞ்சணை மீது படுத்துப் புரண்டபடி வந்து சோஷலிச பாணிக்குப் புது மெருகு ஏற்றியிருக்கின்றனர்!

★

கதிரவனை மறைக்கப் பார்த்தார், காமராசர்!



உதய சூரியனைப்போல் எழும்பிற்று செந்தமிழர் உணர்ச்சி! 'எம் தாயகத்தைப் பிளந்திட்டால் உம் மமதையைப் பிளப்போம' எனச் சங்காரம் முழங்கிப் புறப்பட்டது பட்டாளம்! 20-ந் தேதி 'திங்கள்' உருமாறி 'ஞாயிரு'யிற்று! கர்வத்தால் கனத்துப்போன தலை கொண்டோர் தடுமாறினர் தமிழர்தம் அறைகூவல் கேட்டு! நாட்டுக்கே அன்றி வீட்டுக்கோ வாழ்வோம்?-என எழும்பிய முரசுதனை நிறுத்தப் பார்த்தார் காமராசர்,கண்துடைக்க மட்டுமே பயன் தரும் அறிக்கை எனும் கணை மூலம், பாவம்! கதிரவனை மறைக்கப் பார்த்தார் காமராசர், அந்தோ; தலைகுனிந்தார் தலை குனிந்தார்! மலையனையர் என்று கருதப்பட்ட காமராசர் தலை குனிந்தார்!

காமராசர் தட்சிணப் பிரதேசத்தைப் பற்றி என்ன நினைக்கிறார்? அழுகிய பிணம்போல் ஆகிவிட்டதே அந்தப் பிரச்சினை; அதுகுறித்து அவர் கருத்துதான் என்ன?

—இதை இன்னும் அவர் அறிவிக்கவில்லை.

தட்சிணப் பிரதேசம் தோன்றினால் தலை கொய்து விடுவோம்;—என்று அறிவிக்கிறது 'விடுதலை'. அதை எதிர்ப்பதையும் ஒரு காரணமாகக் கொண்டுநடத்தப்பட்ட சர்வகட்சி ஹர்த்தாலில் கலந்து கொள்ளாமல்!

பெரியார் எதிர்க்கிறார்; இதில் காமராசர் கருத்து இன்னும் தெளிவாகவில்லை!

ஆனால் காமராசரோ சென்றகிழமை கிருஷ்ணமேனனைக் கண்டு பேசினாராம், தட்சிணப் பிரதேசம் குறித்து!

காமராசரைப் போலவே கிருஷ்ண மேனனும் ஒரு சாகசக்காரர்!

கீதை ஓதிய கிருஷ்ணன் குழலூதி கோபிகையரைப் பெற்றான்; இந்தக் 'கிருஷ்ண' (மேன)னும், குடியாத்தம் தேர்தல் மூலம் பெரியாரைக் கவர்ந்த காமராசரையும் கவர்ந்து விடுவாரோ என்ற ஐயம் உதயமாகியிருக்கிறது.

அறிஞர் அண்ணா அறிவித்தார்: "காமராசர் ஆட்சி ஆணல்ல; பெண்தான்" என்று!

அந்த 'சாகசக்காரி' கிருஷ்ணமேனனுடைய குழலுக்கு மயங்கி கொள்கையை விற்றுவிடுவாளா?

அதோ; வேணுகானம் கிளம்புகிறது மேனனின் குழலிலிருந்து! காமராசர் என்னும் காரிகையின் கவனத்தையும் அதுகவர்கிறது. ஆனால் பெரியார் வேறு இதைக் கவனித்துக் கொண்டிருப்பாரோ—என்ற அச்சம் வேறு அந்தக் காமராசப் பெண்ணை ஆட்கொள்ள—

அந்தக் காட்சியைத்தான் உருவகப் படுத்தியிருக்கிறது, புகழ்பெற்ற கேலிச் சித்திர ஏடு, 'சங்கர்ஸ் வீக்லி'!

"தட்சிணப் பிரதேச யோசனையைப் பற்றி கிருஷ்ண மேனனும் காமராசரும் விவாதித்தனராம். (விவாதம்) நாயக்கருக்குத் தெரியாமலா?" —'சங்கர்ஸ் வீக்லி'

அறிவு மணம் பரப்பும் நூல்கள்!

பன்மொழிப் புலவர்,

கா. அப்பாதுரை எம். ஏ., எல். டி., எழுதிய

வாழ்க!	ரூ.	3	0	0
வளரும் தமிழ்		3	0	0
சரித்திரம் பேசுகிறது		3	0	0
மருதூர் மாணிக்கம்		3	0	0
உலகப் பேரறிஞர்களின்				
மலர் மணம்	ரூ.	2	0	0
நாரண துரைக்கண்ணன் (ஜீவா) எழுதிய				
மேனகா		1	8	0
சதுரங்கம்		1	3	0
புதுமைப் பெண்		1	12	0
அழகி லீலா மஞ்சுளா)		1	8	0
இல்லற இன்பம் (அருணன்)		1	0	0
கண் மணி		1	0	0

கவிஞர் கண்ணதாசன் நூல்கள் அனைத்தும் கிடைக்கும்.

—உடனே எழுதுக—

அருணோதயம், 40 பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14.

பிறைவானம்......

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

வது தென்படுகிறதா என்று தேடினான். முடிவில் ஓரிடம்—ஒரே ஒரு இடம் தென்பட்டது! அங்கு ஓடினான். மூடப்பட்டுக்கிடந்த மண்ணைத் தன் இருகைகளாலும்தோண்டினான்"

"ஏன் அண்ணா?"

"புரியவில்லையா கற்பகம்! அம்மாவின் பிணத்தையாவது பார்க்க வேண்டுமென்ற ஆசை அவனை இப்படி மிருகமாக ஆக்கிவிட்டது! நடு இரவிலே—அமைதி தவழும் சுடுகாட்டிலே — 'அம்மா, அம்மா!' என்ற ஏக்கக் குரலோடு — அவன் தன் தாயின் முகத்தைக் காண—மூடிய குழியைத் தோண்டிக்கொண்டிருந்தான்! ஆனால் பைத்தியக்காரன், 'முகத்தில் விழிக்காதே!' என்று அன்று ஆணையிட்டாளே, அந்தத் தாயின் பிணத்தின் முகத்தில்கூட தான் விழிக்க முடியாது என்பதை அவன் உணரவில்லை!"

"என்ன அண்ணா ஆயிற்று?"

"என்னால் சொல்ல முடியவில்லை, கற்பகம்! இதைப் படி!" என்றார் அண்ணன். அன்றைய தினசரிப்பத்திரிகையைக் கொடுத்தார். ஒரு குறிப்பிட்ட இடத்தைக் காட்டினர்.

தங்கை படித்தது:

"**சுடுகாட்டில் திருட்டு முயற்சி! கைதிக்கு தண்டனை!** சுடுகாட்டில் கொஞ்சம் நகைகளுடன் பிணமொன்று புதைக்கப்பட்டதாம்; அந்த நகைகளைத் திருடுவதற்காக குழியைத் தோண்டிக் கொண்டிருந்த ஒருவனை திடீரென்று போலிசார் கைது செய்தனர். வழக்கில் அவனுக்கு தண்டனை தரப்பட்டது!

"பார்த்தாயா கற்பகம்? தாயே தெய்வம்! பெற்றவளின் மனம் நோக நடந்தால், அந்தப் பழி சும்மா விடாது!" என்றார் அண்ணன்.

"தாயே தெய்வம்" என்று முணுமுணுத்துக்கொண்டிருந்தது தங்கை!

—சொர்ணம்

அறிவிப்பு

மதுரை மாவட்ட தி. மு. கழகக் கிளைக் கழகத் தோழர்களுக்கு, பிப். 20-ல் தங்கள் பகுதியில் எங்கெங்கு வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடந்தது என்ற விபரத்தை உடனடியாகத் தலைமைக் கழகத்திற்கும், மதுரை மாவட்டக் கழகத்திற்கும் எழுதியனுப்ப வேண்டுகிறேன்.

எஸ். முத்து,
செயலாளர்,
மதுரை மாவட்ட தி. மு. க.

அன்பழைப்பு

பெருந்தகையீர்,

29-2-56-ல் நகர மன்றத் தலைவர் திரு. பெருமாள் அவர்கள் தலைமையில், அறிஞர், அண்ணா அவர்களின் வாழ்த்துரையுடன் நடக்க இருக்கும் எங்கள் திருமண விழாவிற்கு தங்கள் வருகையை விழைகிறோம்.

இடம்: விளக்கடி வீதி,
காஞ்சீபுரம்,

கா. வே, முருகேசன்,
(தி. மு. க. பாடகர்,)
எல்லம்மாள்.

உங்கள் பார்வை

ஆசிரியர் அவர்களுக்கு,

21-2-56
சென்னை-6.

நினைவிருக்கட்டும்!

கடந்த 20-ல் தமிழகமெங்கும் பொது வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடந்தேறின.

சென்னை மாநகரில் பல முக்கிய தொழில் மனைகள், பஞ்சாலைகள், அலுவலகங்கள் எல்லாம் மூடப்பட்டு, சர்வ கட்சி கூட்டணிக்கு வெற்றியை தேடித் தந்தது.

இந்நிலையில் சென்னையில் உள்ள சிம்சன் குரூப் கம்பெனிகளின் தொழில் சங்கம், தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்யாதீர்கள்! விஷமிகளோடு சேராதீர்கள் என்று வேண்டுகோள் விடுத்தது!

மேற்படி கம்பெனி தொழிலாளர்கள் தங்கள் கம்பெனி முதலாளியோடு அறப்போர் நடத்துகின்றபோது, 'பொதுமக்களே! நீங்கள் எல்லாம் எங்கட்கு ஆதரவு தாருங்கள்! முதலாளியின் கொடுமையைப் பாருங்கள்! என்றெல்லாம் முழக்கமிட்ட சங்க நிர்வாகிகள், பொதுமக்களே நேரடியாக தங்களுடைய தன்மானத்தை இழக்கமாட்டோம் உரிமைக் கிளர்ச்சி நடத்தியே தீருவோம்! தமிழ் தொழிலாளத் தோழர்களே நீங்கள் எல்லாம் ஒன்றுபட வேண்டும் என்று வேண்டுகின்றபோது முடியாது... முடியாது.,.நாங்கள் விடமாட்டோம் என்று மார்தட்டி, தொழிலாளர்களை வேலைக்கு வர பணித்தனர் சங்க நிர்வாகிகள்.

தமிழ் உணர்ச்சி கொஞ்சம்கூட இல்லாத இந்த சங்க நிர்வாகிகளைப்பற்றி நாம் இப்போது நன்றாக அறியமுடிகின்றது! ஆனால் ஒன்று; இத்தகைய நிர்வாகிகளையும், கங்காணிகளையும் கொண்ட சிம்சன் கம்பெனியில்தான் திரு குருசாமி அவர்கள் பெரியாருடைய 'வேனை'த் தயாரிக்க ஆர்டர் கொடுத்தார்.

என்றாலும் சிம்சன் குரூப்கம்பெனிகளில் 20ல் வேலைக்குப் போகாதவர்கள், ஊர்வலத்திலும் பொதுக் கூட்டத்திலும் பங்கு கொண்டவர்கள் பலர் உண்டு! அவர்களின் இன உணர்ச்சியையும், மொழிப் பற்றையும் கண்டு பெருமைப்படுகின்றோம்.

இந்த நேரத்தில் பிறிதொன்றையும் எழுத வேண்டியிருக்கிறது! படமெடுக்கும் ஸ்டுடியோக்கள் பல மூடப்பட்டன; ஜெமினியைத் தவிர!

தமிழுக்காகவே நாங்கள் பிறந்தோம், தமிழ் மொழியும், தமிழ் நாடும்தான் எங்கள் உயிர்! பார்த்தீர்களா? எங்களின் பெருமுயற்சிதான் அவ்வையார்! என்றெல்லாம் பேசிய ஜெமினி ஸ்டுடியோ மூடப்படவில்லை! இருந்தும் அன்று தொழிலாளர்கள் சிலர் செல்லவில்லையாம்!

உண்மைத் தமிழர்கள் இந்த நிகழ்ச்சிகளைக் குறித்து வைத்துக் கொண்டால் அவை என்றைக்காவது ஒருநாள் பயன்பட்டே தீரும்!

அன்பன்,
நாகை. மன்னன்.

பிறை வானம்

...பிள்ளைகள் பகுதி...

தாயே தெய்வம்!

"அண்ணா, தெருவெல்லாம் ஒரே போலீஸ் மயமாக இருக்கிறதாமே! வா; அண்ணா—கடையெல்லாம்—பள்ளி யெல்லாம் — ஊரெல்லாம்—உறங்கிக் கிடப்பதைப் பார்த்து விட்டு வருவோம்" என்று கேட்டுக் கொண்டே **அண்ணனிடம்** வந்தது தங்கை **கற்பகம்!**

அண்ணன் மௌனமாக இருந்தார். துள்ளிக் குதித்துப் புறப்படக் கூடிய அவர், ஏன் அப்படி 'கம்' மென்று இருக்க வேண்டும்? தங்கைக்குஒரே புதுமை! 'அண்ணா! என்ன அண்ணா? என்ன நடந்தது? ஏன் ஒரு மாதிரி...?' "—தங்கை வழக்கம்போல் கேள்விமாரி பொழிய ஆரம்பித்தது.

சாதாரண நாளாக இருந்தால், "அடடா! நாடெல்லாம் ஓய்ந்து கிடக்கும்போது, இன்றைக்காவது உன் வாய் 'வேலைநிறுத்தம்' செய்யக்கூடாதா?" என்று கிண்டல் செய்திருப்பார். ஆனால், இன்றோ "செய்தி ஒன்று கேள்விப்பட்டேன் கற்பகம்—அதுதான் என்னைச் சிலையாக்கி விட்டது, இப்படி!—என்றார் "என்ன செய்தி அண்ணா?"

"கடவுளை மறந்தான் ஒருவன்..."

"என்ன...என்ன?"

"ஆமாம்; தெய்வத்தின் அறிவுரையை மறந்தான்—இன்று தேம்பித்தேம்பி அழுகிறான்!"

"என்ன அண்ணா இது, என்னென்னவோ பேசுகிறீர்கள்? தெய்வமாவது; வேண்டுகோளாவது? எந்த தெய்வம்—எந்தக் காலத்தில்—யாருடன் பேசியது?"

"கற்பகம்! கடவுள் என்றதும் கோயிலிருக்கும் கல்லைச் சொல்கிறேன் என்று நினைத்தாய்? நான்தான் உனக்குப் பலமுறைசொல்லியிருக்கிறேனே, உலகத்தில் கண்கண்ட தெய்வம் **தாய்** தான் என்று! அந்தத் தாயின் மனம் நோக நடந்தால் வாழ்வு சிறக்காது! அப்படி ஒரு அம்மாவின் மகன், பெற்றவளை மறந்தான்—தாயன்புக்கு அவன் இழைத்த பெருந்துரோகம்........" "கதையா அண்ணா?"

"கதைபோலத்தான் இருக்கும் கற்பகம்; அதுவும் கருத்துள்ள கதை! கதைமட்டுமல்ல; இன்று, நாளை, இனி என்றும் மற்றோருக்கு ஒரு நல்லரும் பாடம்! ஆம் தங்கையே, தவறு செய்த ஒரு தம்பியின் முடிவைக்கேள்...

"முரளி ஏழைக்குடும்பத்தில் பிறக்கவில்லை—ஆனால் குவிந்துகிடக்கும் பணத்தை செலவு செய்ய அஞ்சிச் சாகும் ஒரு 'கஞ்சன்' அவனது அப்பா! ஆனால் முரளியின் அம்மா, தங்கம் என்று பெயர். பெயர் மட்டுமல்ல; தங்கத்தினும் விலையுயர்ந்த நற்பண்புகள் கொண்டவள்!

"உனக்குத்தான் தெரியுமே, மனிதன் கெடுவது சூழ்நிலையால் தான் என்று. முரளி நல்ல பையன் தான். ஆனால் அவனுக்குக்கிடைத்த நண்பர்களோ—அவனைத் தேடிவந்து விடாமல் பிடித்துக்கொண்ட சிறுவர்களோ—எதற்கும் துணிந்தவர்கள். அவனுடன் கூட அலையும் நண்பர்களைப் பார்த்து முரளியின் அம்மா பயந்தே போனாள்! மகனைத்தனியே அழைத்து வைத்துக் கொண்டாள். நற்புத்திகள் சொன்னாள். ஆனால் முரளிக்கோ...தாயின் புத்தி மதிகளைவிட, நண்பர்களின் ஹோட்டல் வர்ணனையும், சினிமாப் பாட்டுகளுமே உயர்வாகத் தெரிந்தது...

"அப்பாவிடம் பணம் கேட்டான், அருமந்த நண்பர்களுடன் செலவழித்து மகிழ. தந்தைக்கு ஏது தாராள மனம்? அவருக்கு இரும்புப் பெட்டிதான் உலகம்! காசு என்று கேட்டால், கண்டபடி ஏசுவார். ஆனால் அந்த நேரத்திலேயெல்லாம், தன்னிடம் ஏதாவது இருந்தால் கொடுப்பாள் அம்மா—இப்படி வளர்ந்தான் முரளி!

'அம்மாவுக்கு ஒரேவேதனை! என் கண்மணி பள்ளிசெல்லுகிறான்; பார் புகழ மேதையாவான்—என்று என்னென்னவோ எண்ணிய அவளது மனம் கவலையால் தவித்தது. இப்படியிருக்கையில் ஒருநாள், அவளது கவலையை அதிகமாக்கும் செய்தி ஒன்றும் அவளுக்குக்கிடைத்தது. முரளி நான்கு மாதங்களாக பள்ளிக்குச் செல்லவில்லை; பள்ளிச் சம்பளம் என்று வாங்கிச் சென்ற பணத்தை தானே செலவு செய்து விட்டான்! பள்ளி ஆசிரியர் மூலம் கிடைத்தது இந்த நெஞ்சுலுக்கும் செய்தி! அம்மா அழுதே விட்டாள்.

"மாலை வீட்டுக்குவந்தான் முரளி. அம்மா கோபத்துடன் அவனிடம் போனாள். 'எங்கேடா போய் வருகிறாய்?' என்று கேட்டாள். 'எங்கேயா? பள்ளிக்கூடத்திற்குத்தான்!' என்றான் முரளி! 'என்னை பைத்தியக்காரியாகவா செய்கிறாய்? நீ பள்ளிக்கூடம் சென்றே மூன்று மாதமாகிறதாமே!'—எனச் சொல்லும் போது அம்மாவின் ஆத்திரம் எல்லை கடந்தது. அவளையும் அறியாமல் அவன் கன்னத்தில் "பளார் பளார்' என்று அறைந்தாள். முரளி அவள் பிடியிலிருந்து தப்பி ஓடிவிட்டான்.

"அன்று இரவு முரளி தூங்கவேயில்லை. 'நான் செய்த தவறு தெரிந்து விட்டதே, என்ன செய்வது? இனி பள்ளிக்கூடம் போவதென்றால் மூன்று மாத சம்பளத்தை ஒன்றாகக் கட்டவேண்டுமே! பணத்திற்கு எங்கே போவது?' என்று யோசித்தான்.

"ஏன் அண்ணா, அம்மாவையே கேட்டிருக்கலாமே!" என்று குறுக்கிட்டுக் கேட்டாள் தாயின் குண மறிந்த தங்கை கற்பகம்.

"முட்டாள் அவன், ஆசையும், பாசமும் நிறைந்த ஒரு உருவம் அம்மா என்ற பெயரில் இருக்கிறது—அவளிடம் சென்று மன்னிப்பு கேட்டால், பள்ளிக்குச் செல்ல வழி செய்து தருவாள் என்பதை மறந்தே போனான். மாறாக மாபெரும் தவறொன்றைச் செய்யத் துணிந்தான். பல நாட்கள் அவனது நண்பர்கள் ஊட்டிய விஷயம் அன்றிரவு வேலை செய்துவிட்டது. ஆம், தங்கையே! தந்தை அறியாமல் அவரது இரும்புப் பெட்டியைத் திறந்து, பள்ளிக்குத் தேவையான பணத்தை எடுத்து விட்டான் முரளி!

"தெரியாமலா போகும்? பொழுது விடிந்ததும் வீட்டிலே புயல் வீசியது! அதிலே சிக்கித் தவித்தது முரளி அல்ல; அவனது தாய்தான்! மகன் செய்த தவறு கண்டு தங்கம் வாய்விட்டு அழுதாள்; அன்று முழுதும் சாப்பிடவேயில்லை. முரளியைத்தன் மடியிலே படுக்கவைத்துக் கொண்டு, 'வேண்டாமடா இந்த விபரீத புத்தி?' என்று கெஞ்சினாள். அம்மா அழுவதைக் கண்டபோது முரளியும் அழுதான்; 'திருந்தி விட்டேன்' என்று உறுதிதந்தான்!"

"அப்படியானால் அவன் திருந்தி விட்டானா அண்ணா?"

"விஷம் கலந்த நெஞ்சாயிற்றே, அவ்வளவு விரைவிலா பண்பட்டுப் போகும்! நாளடைவில், வீட்டில் அடிக்கடி பணம் காணாமல் போய்க் கொண்டேயிருந்தது. முரளி அவிழ்த்துவிட்ட கன்றாகச்சுற்றிக் கொண்டிருந்தான். ஆனால் அந்தக் கன்றுவது தாயின் நினைவு வந்தவுடன், "ம்மா" என்று அலறிக் கொண்டு நாலுகால் பாய்ச்சலில் ஓடிவருமே! ஆனால் முரளியோ, அம்மாவை அடிக்காதது தான் குறை! கண்டபடி திட்டினான்—'ஆற்றில் விழுவேன்; தூக்கில் தொங்குவேன்' என்றெல்லாம் பயமுறுத்தினான்! ஆனால் தாயன்புக்கு தான் இழைக்கும் துரோகம் எவ்வளவு பயங்கரமானது என்பதை அவன் அப்போது உணரவில்லை!

"இப்படி யிருக்கையில் ஒருநாள்—அவனது முட்டாள்தனத்திற்கு சிகரம் வைக்கும் சம்பவம் ஒன்று நடந்து விட்டது! வீட்டிலே ஒரே நாளில் 500 ரூபாய் மாயமாய் மறைந்தது. 'மாயம்' என்றா சொன்னேன்? தவறு; முரளியின் கையிலே சிக்கிவிட்டது! தந்தை குதித்தார்; குய்யோ முறையோ என்று அலறினார்! அம்மாவும் தவித்தாள்! ஒரு முறையல்ல; இரு முறையில்ல; பல ஆயிரம் முறைகள் படித்துப் படித்து புத்தி சொன்ன பிறகும் முரளி இந்த படுபாதகத்தைச் செய்தான் என்றால்...அவளது நெஞ்சிலே எல்லையற்ற கோபம் எழுந்து நின்றது. அந்தக் கோபத்தினால், எப்படியோ, எங்கேயோ இழுத்துச் செல்லப்பட்டு விட்டது பிள்ளைப் பாசம்! மகனைப்பற்றி அவள் கண்ட கனவுகள்—ஆனால் அவள் பெற்ற ஏமாற்றம்—இவை அவளுக்கு ஆத்திரத்தை, அடங்கா கோபத்தைத் தான் தந்து விட்டிருந்தது.

"அந்த நேரத்தில் முரளிவந்தான், பணத்தில் ஒரு பகுதியை செலவு செய்துவிட்டு! வாசலில்அடியெடுத்து வைத்தது நான் தாமதம்; அவன் கன்னத்திலே 'பளார்' என்று ஒரு அறை விழுந்தது. முரளி தடுமாறிப் போனான். சிவந்த கண்களுடன் நின்று கொண்டிருந்தாள் அம்மா! 'அம்மா!' என்று அலறினான் முரளி! 'அம்மா! நான் உன் அம்மா அல்ல; நீ என் மகனு மல்ல—என் மகன் செத்து விட்டான்; பெற்ற என் வயிறு பற்றி எரிகிறதடா! உருப்படாதவனே, போ வெளியே! வீட்டில் நுழையாதே! என் முகத்தில் விழிக்காதே! என் முகத்தில் விழிக்காதே!' என்று கத்தினாள் அம்மா! 'படார்' என்று தெருக் கதவை சாத்தினாள்.

"சிவந்துவிட்ட கன்னத்தைத் தடவியபடியே முரளி தெருவில் இறங்கினான். குமுறி எழுந்த தாயின் மனம் அவனை சபித்து விட்டது—அந்தச் 'சாபம்' எந்த அளவுக்கு பலிக்கும் என்பதை உணராத அவன் நடந்து கொண்டிருந்தான்"

"எங்கே அண்ணா போனான்?"

"எங்கேயோ போனான். ஊரை விட்டே ஓடிவிட்டான். எங்கெங்கோ சுற்றினான். கையிலிருந்த பணம் எத்தனை நாளைக்கு? பிச்சைக்காரனைப்போல் சுற்றினான். எத்தனை நாளைக்குத்தான் இப்படியே இருக்க முடியும்? மீண்டும் தவறுகள் செய்தான்– இப்போது அவனுக்கு புத்தி சொல்ல யாருமே இல்லை! நாட்கள் ஓடிக்கொண்டேயிருந்தன......இந்த நிலையில், எங்கிருந்தோ ஒருநாள் அவனுக்கு அம்மாவின் நினைவுவந்து விட்டது. அம்மாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலும் தோன்றி விட்டது!"

"திரும்பி வந்தானா அண்ணா?"

"வந்தான்—ஆனால்... ஊரிலே அடியெடுத்து வைத்ததும், அம்மாவுக்குப் பதிலாக, அவளது பிண ஊர்வலத்தைக் காணப்போகிறோம் என்று அவன்நினைத்துக்கூடப்பார்க்கவில்லை!"

"என்ன? அந்த அம்மா இறந்து விட்டார்களா, அண்ணா?"

"ஆமாம், கற்பகம்! முரளி வீட்டைவிட்டுச் சென்ற அன்று படுத்தவள்தான் தங்கம்; மகன் இழைத்த கொடுமை அவளை அணு அணுவாகத்தின்று கொண்டே வந்தது. மருத்துவர்கள் வந்து என்ன பலன்? விலையுயர்ந்த மருந்துகள் எல்லாம் வீண்தான்! மன நோயுக்கு மாற்று ஏது? "முரளி! முட்டாளே! விழிக்காதே என் முகத்தில்! விழிக்காதே என் முகத்தில்! இப்படி புலம்பிக்கொண்டேயிருந்தாள். ஒரு நாள் அந்த உதடுகளும் மூடிவிட்டன. அந்த நாள்தான் முரளியும் ஊருக்கு வந்த நாள்!

"சுடுகாட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தது பிண ஊர்வலம். கூட்டத்திலே தன் அப்பா முக்காடிட்டுச் செல்வதைக் கண்ட முரளி, பக்கத்திலே விசாரித்தான், இறந்தது யார் என்று! 'மகராசி! மகன் நினைவாலேயே போய்விட்டாள்!' என்றார் ஒருவர்—'அம்மாவைக் கொன்ற அந்த அநியாயக்காரன் உருப்படுவானா!' என்றார் ஒருவர்—'பெரிய பணக்கார, குடும்பமாயிற்றே! அந்த அம்மாவுக்கு ஏராளமான நகைகளாம்; அத்தனையையும் உடம்பிலேயேபோட்டு, அப்படியே புதைக்கப்போகிறார்களாம்' என்றாள் ஒரு பெண்—இவ்வளவையும் கேட்டான் முரளி! 'ஐயோ!' என்று அலறிக் கொண்டு கீழே உட்கார்ந்து விட்டான். வாய்விட்டு அழவில்லை; 'அம்மா, அம்மா!' என்று விம்மி விம்மி அழுதுகொண்டேயிருந்தான்! இப்படி எவ்வளவு நேரம் 'இருந்தான் என்று அவனுக்கேதெரியாது.

"நன்றாக இருட்டிவிட்டது! அம்மா இறந்து விட்டாள்—ஆனால் இப்போதுதான் அந்தப் பாவியின் உள்ளத்தில் எங்கிருந்தோ புறப்பட்டது பாசம்! தாயைக்கொன்ற அவனுக்கு அவளது முகத்தைப்பார்க்கவேண்டுமென்ற தணியாத ஆசை தோன்றி விட்டது. அவ்வளவுதான்; மறு கணம் இடத்தைவிட்டு எழுந்தான்; தலைதெறிக்க சுடுகாட்டை நோக்கி ஓடினான்!

"நல்ல இரவு—பயங்கரமான அமைதி! சுடுகாட்டில் அங்கொன்றும் இங்கொன்றுமாக பிணங்கள் எரிந்து கொண்டிருந்தன. புதிதாக பிணம் புதைக்கப்பட்ட இடம் எதா

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

கடைசிப்பக்கம்

எழுத்தாணி

இந்த வாரம் பரிசு பெறும்
தோழர்

(●) எஸ். சிவராமன்,
12. ஒத்தவாடை வீதி,
திருமலைச்சேரி.

சிதம்பரம்; சேவூர்.

(?) ரஷ்யாவின் ஆளும் கட்சிக்கும், இங்குள்ள காங்கிரஸ் கட்சிக்கும் உள்ள வித்யாசம் என்ன?

அவர்கள் வெளிப்படையாகவே ஸ்டாலின் மீது மண்ணை வாரி இறைக்கிறார்கள். இவர்களோ காந்தியின் சிலை நிறுவிவிட்டுக் கொஞ்சம் புத்திசாலித்தனமாக அந்தப் 'பணி'யைப் புரிந்து வருகின்றனர்!

மகாராசன்; பாளையங்கோட்டை.

(?) பெண்களை வர்ணிப்பதில் கம்பனை விடச் சிறந்தவர் இருக்கிறார்களா?

இருக்கிறார்கள்; மாதர் சங்கத்தில் கீரா கவானா பேச்சுக்களைக் கேட்டதில்லையோ?

ஆர். காளிமுத்து; டந்தநல்லூர்.

(?) காங்கிரஸ் கட்சிக்கு ஏதாவது கொள்கை இருக்கிறதா?

மிரண்டோடும் காட்டெருமைக்கு கொள்கை வேறு?

(?) ஓய், எழுத்தாணியாரே! எனக்குக் கருப்பைக் கண்டால் வெறுப்பாயிருக்கிறதே?

என்ன செய்வது; ஜவ்வாது கூட கருப்புதான்!

ரா. கார்மேகம்; மாடக்கோட்டன்.

(?) காமராசர் மந்திரியாகி நாட்டுக்கு செய்த நன்மை என்ன?

தமிழகம் இளைத்திருக்கிறது—தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் பறிபோனதைத்தான் குறிப்பிடுகிறேன்!

(●) எஸ். சிவராமன்;
திருமலைச்சேரி.

(?) உலக சரித்திரத்தைப் நேருவுக்குப் பதில் காமராசர் எழுதியிருந்தால்....?

காட்டுச் சரித்திரம் எழுதுபவர் களைப் பாரதத்தின் கட்டைவிரலை வாங்கிவிடுவேன் என்று கர்ஜித்தவர், உலகச் சரித்திரத்தை எங்கே எழுதப் போகிறார்!

டி. பி. முத்தையா; மேல்பட்டி.

(?) பாம்புக்குப் பால் வார்த்தால் என்ன நடக்கும்?

காமராசரைப் பொறுத்தவரையில் திராவிடக் கழகம் செய்திருக்கிற தவறு திருப்ப ஏற்படும்!

இராமச்சந்திரன்; இராதா
மணாளன்—திருப்பூர்.

(?) ஓய், எழுத்தாணியாரே; கொள்கை வளருது கோபுரம் போல என்று கூறுகிறீரே: பொருந்துமா?

'இமயமலை வீழ்ந்ததுபோல்வீழ்ந்து விட்டான் ஜாரரசன்'—என்று பாரதியார் பாடியிருக்கிறாரே, அதைப் படித்துவிட்டு இமயமலை எப்போது வீழ்ந்தது என்று கேட்பீர் போல் இருக்கிறதே!—தமிழ் தெரிந்தவர்களுக்கு இது தெரியுமென்றே நினைக்கிறேன்!

தயா. ஜெயபால்; காரமடை.

(?) காமராசரின் மெய்க் காப்பாளர் யார்?

அவர் 'மெய்யை'க் காப்பதே யில்லையே!

பா. வெங்கடேசன்;
நாரியமங்கலம்.

(?) ஜனநாயகம் என்பது யாது?

இந்த நாட்டு தேசிய யானைகள் தின்னும் கரும்புத் துண்டு!

ப. வசந்தா; திருச்செங்கோடு.

(?) தசரதச் சக்கரவர்த்தி இன்று இருந்திருந்தால்?

இருதாரத் தடைச் சட்டத்தை நிறைவேற்றுவதில் கொஞ்சம் தடை ஏற்பட்டிருக்கும்!

அசு. அப்துல் வஹாப்;
அரகண்டநல்லூர்.

(?) நேரு பண்டிதர் பொய்க்கால் குதிரை ஆடினால்.....?

ஆவடி, அமிர்தசரஸ் மாநாடுகள் நடக்கும்!

குப்பையன்; திருச்சி.

(?) காமராசரை நான் எதற்கும் கலங்காத ஆழ்கடல் என்கிறேன்.

இல்லை. அவர் ஒரு மகாமகக் குட்டை!—வெறும் சாகசத்தால் அதிக நாள் சக்கரத்தை உருட்ட முடியாது!

கா. போஸ்; வேலூர்.

(?) ஆரியத்துக்கு அரண் எது?

சுப்ரமணியத்தின் உதவியால் காமராசர் கருத்திலே உருவாகும் திட்டங்கள்தான்!

எஸ். எஸ். மணி; திருச்சி.

(?) காமராசர் பச்சைத் தமிழரா?

இல்லை; கள்ளக்குறிச்சியிலே நம் தோழர்கள் சிந்திய இரத்தம் அவரைச் சிகப்புத் தமிழராக்கி விட்டது!

முதல் அறிவிப்பு

இலக்கிய வானத்தில் என்றுமழியா சுடரொளியாய்
மின்னப் போகும் நான்கு சிந்தனைத் தாரகைகள்!

அண்ணா அன்பன் தீட்டிய,

★ அண்ணாவின் வழியிலே... ★ மாதுளங்கனி
★ பூங்கொடியாள் ★ பச்சைக் கிளி

இந்த நான்கு நூல்களும் ஏககாலத்தில் துரிதமாகத் தயாராகிறது!

விவரங்களுக்கு

புதுமை நூலகம்,
21, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1.

25-ந் தேதியன்று

விற்பனைக்கு கிடைக்கும்.

ராஜா ராணி

கதை வசனப் புத்தகம், உரிமை பெற்றது.
[சென்சார் வெட்டிய வசனத்துடன்]

விலை அணா 8. கழிவு 40 சத விகிதம்

(தேவையான பிரதிகளுக்கு கழிவு நீக்கி முன் பணம் அனுப்பவும்)

முல்லை-காவேரி பதிப்பகம்

சென்னை - 6.

'விடுதலை'யாரின் பார்வைக்கு

''நேற்று தமிழ்நாட்டில் 'ஹர்த்தால்' கூடியவரை அமைதியாகவே நடந்தேறியது. ஒரு சில இடங்களில் மட்டும் அமைதிக்கு பங்கம் ஏற்பட்டது. ஒரு ஸ்தலத்தில் துப்பாக்கிப் பிரயோகமும் நடந்தது துக்ககரமானது. ஆனாலும் மொத்தத்தில் ஹர்தாலுக்கு ஏற்பாடு செய்தவர்கள் கூடியவரை முன் ஜாக்கிரதையாக நடவடிக்கை எடுத்துக் கொண்டனர் என்பதில் சந்தேகம் இல்லை. அவர்களது எண்ணப்படி இந்த ஆர்பாட்டம் நடந்தேறியதுபற்றி அவர்கள் திருப்தி அடைவது இயற்கை.''

—(சுதேசமித்திரன், 22—2—56)

தருமபுரி திராவிட முன்னேற்றக் கழக வளர்ச்சி நிதிக்காக

எஸ். எஸ். இராசேந்திரன்

குழுவினரின் நாடகங்கள்.

தருமபுரி கணேசா தியேட்டரில்

26-2-56 ஞாயிறு இரவு 9-30 மணிக்கு,

அறிஞர் அண்ணா
தலைமையில்

மணிமகுடம்

27-2-56 திங்கள் இரவு 9-30 மணிக்கு,

மு. கருணாநிதி அவர்கள்
தலைமையில்

புது வெள்ளம்

ஆகிய நாடகங்கள் நடைபெறும்.

'முரசொலி'

இலங்கைத் தோழர்களுக்கு:

ஆண்டு சந்தா	6-0-0
6-மாத சந்தா	3-8-0

இலங்கை நேயர்களிடமிருந்து வி. பி. பி. மூலம் சந்தா தொகை பெற்றுக் கொள்ள இயலும்.

வெளிநாடு

ஆண்டு சந்தா	7-0-0
ஆறுமாத சந்தா	4-0-0

மலேயா நேயர்கள், சந்தா தொகைக்கு 'கிராஸ்' செய்த பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் அனுப்ப வேண்டுகிறோம்.

மூன்று மாத சந்தா கிடையாது.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-2